Registered No. M. 878.

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மஞ்ஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரதி ஆங்கில௴
15உயில் பிரசுரமாகி நடைபெறும்

## மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 3. } 1912௵ ஆகஸ்டு௴ 15௳ / பரீதாபி௵ ஆடி௴ 31௳ { பகுதி 4

ப. நாராயண ஐயர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி ஐயர், B. A., B. L., F. T. S. } பத்திராதிபர்.

வருஷ சந்தா ௹ 2 தனிப்பிரதி அணா 4.

மதுரை:
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

பொருளடக்கம்.

(CONTENTS.)

1. சமீபகாலத்தில் ஓர் அவதாரபுருஷனை எதிர்பார்த்தல்-ப.நா. கூகூ

Expectation of an Avatara—By P. Narayana Aiyar.

2. ராமாயண கதாபுருஷர்களின் குணநிசயங்கள் பி. எஸ். ஸுப்ரஹ்மண்ய ஐயர். க0எ

Personnel of the Ramayana—By P. S. Subrahmanya Iyer.

3. தேகமும் தேகியும்—தி. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை ககங

Body and Soul—By T. Meenakshisundaram Pillay.

4. ஸ்ரீ சடகோபர் வைபவம்—ம இராகவன். கககூ

The Greatness of the saint, Sri Satakopa. By M. Raghaviengar

5. வருஷம்: அதன் உண்மை—ஆர் எஸ். நாராயணஸ்வாமி ஐயர். கஉரு

Year and its Significance—By R. S. Narayanasamy Aiyar.

6. புத்தகவரவு—பத்திராதிபர். கஉஎ

Review of Books—Editor.

7. பத்திரிகை வரவு—பத்திராதிபர். கஉஅ

Review of papers—Editor.

8. சமாசாரம்—பத்திராதிபர். கஉஅ

News—Editor.

9. பதஞ்சலிமகரிஷி அருளிச்செய்த யோகசூத்திரம்.

Patanjala Yoga Sutra.

விளம்பரம்.

அதிக உன்னதமான உறுதியுள்ள கீர்த்திவகித்த கைக்கெடியாரங்கள், பெரிய செடியாரங்கள், நம்பிக்கையுள்ள மருந்து, எலக்டிரிக் பொன், ஜெர்மன்சில்வர், இமிடேஷன் இரவை கெம்புகற்களாற் செய்த ஆபரணங்கள், புத்தகங்கள், சகுந்தலா கூந்தல் வளரும் பரிமளத் தைலம், அத்தர், போடோகிராப் படங்கள் இன்னும் அநேக சாமான்கள் அடங்கியதுமான கேட்லாக் தங்களுடைய அட்ரஸ் தெரிவிப்போர்களுக்கு ஒரு கேட்லாக்கு இனாமாக அனுப்பப்படும். எம்முடைய கேட்லாக்கில் விலைகள் நிரம்பவும் நயம்.

T. M. கலியாணசுந்தர முதலியார்,
போடோகிராபர், 32-33, நாகப்பையர் தெரு,
திருவட்டீஸ்வரன் பேட்டை,
மவுண்ரோட், சென்னை.

## ADVERTISEMENT.

## அறிவிப்பு.

### உயர்ந்த புத்தகங்கள்! குறைந்தவிலை!

உபநிஷத் அர்த்ததீபிகை என்னும் பெயரால் பிரசித்தம் செய்யப்பெற்ற உபநிஷத்துக்களும், சூத்திரார்த்ததீபிகை என்னும் பெயரால் வெளிவந்த வேதாந்தசூத்ரபாஷ்யம் 9 பாகங்களும், அடியிற்கண்ட குறைந்த விலைக்குச் சொற்பகாலம் விற்கப்படும். வேண்டியவர்கள் தஞ்சாவூரில் கோவிந்தன் அண்ட் பிரதர்ஸ் கம்பெனியிலிருந்தும், சென்னை தம்புசெட்டித் தெரு ரிப்பன்பிரஸ்விலிருந்தும், அடியில் கையொப்பமிட்டிருக்கிறவரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

### புத்தகங்களின் விவரம்.

இவைகளில் ஸம்ஸ்க்ருத மூலமும் தமிழ்பாஷ்யங்களும் குறிப்புரைகளும் அடங்கியிருக்கின்றன.

| | முன்விலை. ரூ அ ப | இப்போதியவிலை. ரூ அ ப |
|---|---|---|
| ஈசோபநிஷத் | 1—8—0 | 0—8—0 |
| கேநோபநிஷத் | 1—12—0 | 0—10—0 |
| கடம் | 4—0—0 | 1—8—0 |
| முண்டகம் | 2—8—0 | 1—0—0 |
| மாண்டூக்யம் கவுடபாதர் அவர்களுடைய காரிகையுடன் தமிழில் | 3—8—0 | 1—8—0 |
| தைத்திரீயம் | 6—0—0 | 2—0—0 |
| சூத்ரார்த்ததீபிகை 9ஸஞ்சிகை | 6—12—0 | 2—4—0 |

தபால்சார்ஜ் பிரத்யேகம்.

அ. சிவராவ்.
ரிடையர்டு டிஸ்ட்ரிக்ட் ரிஜிஸ்ட்ரார்,
61 நிர். கச்சேரி ரோட்,
மைலாப்பூர்.

## NOTICE.

A Theosophical Book Depot has been opened at the *Hall of Theosophy*, *Madura* for sale of English and Tamil Theosophical books which are sold very cheap.

V. VENCUSAMI AIYAR,
Manager.
Theosophical Book Depot, Madura.

# புஸ்தகம், துண்டுப் பத்திரிகைகள் விளம்பரம்.

| | |
|---|---|
| ஏசுகிறீஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல். The Imitation of Christ (in Tamil) | 1-0-0 |
| பிராசீன தர்மங்களின் உயர்வும், இக்கால ஆசாரங்களும் | 0-6-0 |
| மனிதனின் ஸமிசாவளியின் உண்மை | 0-4-0 |
| ஹிந்துமத தூஷண பரிகாரம் | 0-4-0 |
| Avvayar's Yoga aphorisms in English | 0-4-0 |
| கடோபநிஷத் தமிழ்மொழிபெயர்ப்பு | 0-3-0 |
| தைத்திரீயோபநிஷத் தமிழ் மொழிபெயர்ப்பு | 0-3-0 |
| சுவேதாசுவதரோபநிஷத் ௸ | 0-3-0 |
| ஐதரேயோபநிஷத் ௸ | 0-2-0 |
| மௌநவாக்கு | 0-2-0 |
| சந்மார்க்கதீபம் | 0-2-0 |
| ஈசோபநிஷத் தமிழ் மொழிபெயர்ப்பு | 0-1-0 |
| அந்திபெஸண்டு அம்மையார் சரித்திரம் (செய்யுள்) | 0-1-0 |
| டில்லி தர்பார் மஹோத்ஸவம் | 0-1-0 |
| வெள்ளியம்பலம் என்னும் ஞாநிகளின்சங்கமும் அதனின்று வெளிவரும் ஆசாரிய புருஷர்களும் | 0-1-0 |
| வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்களின் சரித்திரச்சுருக்கம் | 0-0-6 |
| ஏசுகிறீஸ்து என்பார் சரிதம் | 0-0-6 |
| தேவாலயம் | 0-0-3 |
| தர்மசத்திரங்களும் அவைகளின் சீர்திருத்த முறைகளும் | 0-0-3 |
| இந்தியபுத்திரர்களின் சங்கம் | 0-0-3 |
| பிரஹ்மவித்யை (ஆங்கிலத்தில்) | 0-0-3 |
| சிராத்தம் | 0-0-3 |
| சந்மார்க்க சபையை நடத்தும் முறை | 0-0-3 |
| பிரஹ்மஞாந சபையின் யந்திரம் | 0-0-2 |
| பிரஹ்மவித்யை | 0-0-2 |
| அஷ்டமி பிரதக்ஷிணம் | 0-0-1 |
| பிரஹ்மஞாந சபை | 0-0-1 |
| தசாவதாரங்களின் உண்மை | 0-0-3 |
| மஹாத்மாக்களும், அவர்களை அடையும் மார்க்கமும் | 0-0-3 |

மேற்கண்டவைகளுக்கு 100-க்கு 10 கமிஷன் கொடுக்கப்படும். தபாற் கூலி பிரத்தியேகம். வேண்டுவோர் மதுரை தியஸாபிகல் ஸொஸைட்டி பிரெஸிடெண்டு ப. நாராயணையரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 3. } 1912ஞு ஆகஸ்டுமீ 15உ / பரீதாபிஞு ஆடிமீ 31உ } பகுதி 4.

## சமீபகாலத்தில் ஓர் அவதாரபுருஷரை எதிர்பார்த்தல்.

"விரகிற்றீயினன் பாலிற்படும் நெய் போல்
மறைய நின்றுளன் மாமணி ஜோதியான்"—திருநாவுக்கரசுஸ்வாமிகள்

ஈசுவரன் நீக்கமற நிறைகின்ற பரிபூர்ண வஸ்து. ஞானிகளுக்கு எப்போதும் பிரஸன்னமாயுள்ளார். உலகிலுள்ள ஜனங்கள் ஈசுவரனை அறியும் முறையில் மூவ்வகையாவர். (1) சிலர் ஈசுவரன் சந்நிதானத்தை எப்போதும் எங்கும் காண்பார். இவர்களே ஞானிகளாவர் இவர்களுக்கு ஸாம்யமாக மேற்கண்ட பாசுரத்தில், ஈசுவரன் "மாமணி ஜோதியான்" என சூசிப்பித்திருக்கிறது. அதாவது ஜோதியும் மணியும் (ரத்நமும்) எப்படி அபிந்நமாக இருக்கின்றனவோ, அவ்விதமே ஞானிகளின் ஹிருதயத்தில் ஈசுவரன் நீங்காமல் என்றும் உளன். (2) சிலர் சிற்சில சமயங்களில் பூர்ணமாக இல்லாமல் ஏகதேசம் ஈசுவரனைக் காண்பர். இவர்களுக்கு ஸாம்யமாக மேற்கண்ட பாசுரத்தில், ஈசுவரன் "பாலிற்படும்

---

* மேற்கண்டது, மதுரை பிரஹ்மஞான சபையின் மந்திரத்தில் சென்ற ஜூலைமீ 14உ சாயங்காலம், பிரஹ்மஸ்ரீ ப. நாராயண ஐயர்செய்த உபந்நியாசத்தை ஆதாரமாகக்கொண்டு, எழுதப்பெற்றது.

நெய்போல் மறைய நின்றுளன்" என குறிப்பித்திருக்கின்றது. (3) பெரும்பான்மையர் ஈசுவரன் இருக்கிறான் என்பதை உணரார். இவர்களுக்கு ஸாம்யமாகமேற்கண்ட பாசுரத்தில் ஈசுவரன் "விரகிற் றீயினன்" எனக் குறிப்பித்திருக்கின்றது. இரண்டாம் மூன்றும் வகுப்பிலுள்ளபெரும்பான்மையான ஜநங்களின்பிரயோஜநார்த்தம் தருமத்திற்குக் குறைவும் அதர்மத்திற்கு ஏற்றமும் வரும்போதெல்லாம் ஈசுவரனே சரீரத்தை எடுத்து உலகில் தோன்றுகிறார்என்பது கீதையின் உபதேசம். அவரே அவதார புருஷராவர். அவர் மஹிமையை சாதாரண ஜநங்கள் அறிதல் மிகவும் கஷ்டமானது.

வானத்தின் மண்ணிற்பெண்ணின் மைந்தரிற் பொருளிலாசை
தானற்று, தமையும்நீத்துத் தத்துவ முணர்ந்தயோகர்
ஞானக்கண் கொண்டேயன்றி நாடரும் சோதிமன்னோர்
ஊனக்கண் கொண்டும் காணவுடன் விளையாடல் செய்வான்.

அத்தன்மையான மஹாபுருஷரை சாதாரண மனிதர்கள் பார்ப்பார்கள்தான். ஆனால் அவரை தம்மைப்போல ஒரு சாதாரண மனிதராகவே கருதுவர். இந்த உலகத்தின் இயல்பு. இதனாலன்றோ பகவத்கீதையில் அடியில் வருமாறு பகவான் அருளியிருக்கின்றார்.

"எத்தனையோ ஆயிரம் மனிதர்களில் ஒருவன் ஸன்மார்க்கத்தின் பொருட்டு முயலுகிறான். ஸன்மார்க்கத்தில் முயலுகின்ற அநேகர்களுள் ஒருவன் என் அவதாரத்தின் உண்மையை அறிகிறான்." (7-ம்அத். 3-ம் சு.)

"என்னுடைய உயர்தர நிலையையும் நான் ஈசுவரன் எனவும் அறியாதவர்களாய், மனிதசரீரத்தை எடுத்திருக்கின்றமையால் என்னை அவமதிக்கிறார்கள்." (9ம் அத். 11ம் சு.)

2. பகவான் கிருஷ்ணன் உலகில் நடைபெற்ற காலத்தில் விதுரர், பீஷ்மர் இவ்விருவர் போன்ற சிலர்தாம் அவரை உண்மையாக அறிந்தவர்கள். மற்றவர்கள் அவரை அறிந்தார்களில்லை. சிநேகிதன் என்றும் அத்தான் என்றும், அம்மான்சேய் என்றும், இன்னும் பலவித முறைமைகள் அவருடன் கொண்டாடினார்களே அல்லாமல், ஈசுவரனென த் தெரிந்துகொண்டார்களில்லை. அர்ச்சுநனும்

அடியில் வருமாறு, விச்வரூபத்தைக் கண்டமேல் நடுநடுங்கிச் சொல்லுகின்றான்.

"உம்முடைய இந்த விச்வரூபத்தையும் மஹிமையையும் அறியாத காலத்தில், உம்மைத்தோழன் என்று நினைத்து அசட்டையினாலாவது, அன்பினாலாவது, அடே கிருஷ்ண, அடே யாதவ, அடே நண்ப என்று துடுக்காக உம்மை அழைத்திருப்பேன், அந்தப் பிழையை மன்னித்தருளும். அன்றியும் விளையாட்டிலும், படுக்கையிலும், ஸபையிலும், புசித்துக்கொண்டு இருக்கும்பொழுதும், தோழர்களுடைய முன்னிலையிலும் உம்மை அவமதிப்பாய் அழைத்திருக்கிறேன். "அதனை மன்னியும். நீரோ அளவிடமுடியாத மஹா புருஷன்."(11-ம் அத். 41, 42 சு.)

3. அர்ச்சுநன் மனோநிலையே இவ்விதமானால், கிருஷ்ணனைப் பற்றி, துரியோதநாதிகளின் மனோநிலையையும் சொல்லவும் வேண்டுமோ? பகவானை அவமானப்படுத்தக் கருதி, துரியோதநன் ஒரு கயிற்றால் கட்ட உத்தேசித்தான். அவன் மநத்தை அறிந்த பகவான் விச்வரூபத்தைக் காட்டினார். அந்தக் காட்சியை ஒரு மாயாவியின் கபடநாட்டம் என அந்த துரியோதநன் மதித்தான். உண்மையை அறியாதபடி அவனுக்கு துவேஷபுத்தி மேலிட்டிருந்தது.

4. இவ்விதமே, மேனாட்டில், கிறிஸ்து என்ற மஹாபுருஷர் அவதாரமானபோது, யூதர்கள் கொலைசெய்துபோட்டார்கள். உலகின் இயல்பு இதுவாம். "இவ்விதமே மஹாபுருஷர்கள் அவதரிக்கும் காலத்தில் அவர்களை நிந்திப்பதும், ஹிம்ஸிக்கிறதும், அவர் காலமானமேல், பின்பு அவர் மஹிமையைத் தெரிந்து உயர்ந்த கோவில்கள் கட்டி ஆராதனை செய்வதும் உலகத்தாரின் சுபாவம்." இதற்குக்காரணம் என்னவெனில் பிரகிருத மனிதவர்க்கத்தில் வேற்றுமைப்படுத்தும் தன்மையதாகிய மநம் பிரபலமாய் விருத்தியடைந்திருக்கிறது. ஒருவன் மற்றவன் உயர்வை ஸகியான். எவ்வளவுக்கு எவ்வளவு கீழ்க்கடையான நிலைமையில் மனிதர்கள் இருக்கின்றார்களோ, அவ்வளவுக் கவ்வளவு தம்மைப்போல யோக்யதை உள்ளவராகப் பிறரை பாவிக்கும் சுபாவம் அதிகமாக இருக்கும். உயர்வு

தாழ்வு என்ற நினைப்புகள் அவர்கள் மனங்களில் புகா. தம்மைவிட ஞானத்தில் வலியானை மதியார். பிறரிடம் நலத்தைக்கண்டு மகிழார். அதனால் அதை மேலாகக் கருதார். அகங்காரத்தாலும் பொறாமையினாலும், ஈர்ஷையாலும்,மேலேறுபவனைக் கீழே தள்ள நினைப்பார். தம்மிலும் மிக்காரைச் சகியார்.

5. விகாச முறையில் முதிர்ச்சி அடைந்த ஜீவாத்மாவே பிறரிடம் நலம்கண்டு அதை சிலாகிக்கக்கூடும். விகாசமுறையில் கீழ்ப்படியிலிருக்கின்ற ஜீவாத்மாக்கள், பிறர்நலம் அறியா. அறிந்தும் அதை மதியா. ஆச்சரியம் கொள்ளா. ஜுலு (Zulu) என்ற ஜாதியாரும், செந்நிறத்தினரான இந்தியர்களும் (Red Indians) உயர்வான விஷயத்தைக்கண்டு ஆச்சரியம் கொள்ளாதிருத்தல் தம்முடைய மேலான நிலையின் அடையாளம் எனக் கருதுகின்றார்கள். பிறரிடம் மஹிமையைப் பார்த்து ஸகித்தலே பெரிது, அதைக்கொண்டாடுதல் அதினும் பெரிது. அவ்வித மனோபாவம் உண்டாதலுக்கு ஒருமை உணர்வை உண்டாக்கும் தன்மையதாகிய புத்திதத்துவம் நம்மிடம் மலரவேண்டும். இந்த உத்தேசத்தைக் கருதினவராய் ஸ்ரீ பகவான் கீதையில் 10-ம் அத்தியாயத்தில் தம்முடைய விபூதியைப்பற்றிச் சொல்லுங்காலத்தில், "எங்கெங்கே உயர் நலம் உளதோ, எங்கெங்கே பிரகாசம் உளதோ எங்கெங்கே அழகு உளதோ, அங்கங்கே எல்லாம் நான் இருக்கிறேன்" என்றார். மற்றவிடத்தில் அவர் இல்லை என்பது பகவான்கருத்தன்று. மனிதனை ஞான முறையில் நல்வழிப்படுத்துமாறு அவ்விதமுபதேசித்தார். 'நல்லவை கண்டுசந்தோஷிப்பான். அது நிகழும் போதெல்லாம் தன்னை மறப்பான். அதனால் ஒருமை உணர்வு பெறுவான். அதின் மூலமாக மெய்யுணர்வு அடைவான்.' இதுவே ஞானமலர்ச்சியின்முறை. பயங்கரமான வஸ்துவிலும், தீயவஸ்துவிலும் ஈசுவரன் இருக்கின்றார், ஆனால் அவைகளைக் காணவும், வெறுப்பும் துவேஷமும் உண்டாகும். அதனால் வேற்றுமைப்படுத்தும் மனம் விருத்தியாகும். அன்பு நிகழாது. பயங்கரமான வஸ்துவையும், தீயவஸ்துவையும் கண்டு உவக்கும் தீரர்கள் மிகவும் அருமையானவர். அத்தீரர்கள் பரம பக்தர்களாகவும்,பரமஞானிகளாகவும் இருப்பார்கள். நரஸிம்ஹ அவதாரத்தினால், ஹிரண்யனைக்

கொன்று அவன் ரக்தத்தை உறிஞ்சி அதன் மயக்கத்தில் இருந்த பகவானை, ஸ்ரீ லக்ஷ்மீதேவியும் அணுக அஞ்சினாள். பக்தசிரோமணியாகிய பிரஹ்லாதர் மாத்திரம் தைரியமாய் அவரிடம்போய் நின்றார். அவருக்குத் தான் அஃது இயலும். தன்னை முற்றும் மறந்தவர் அன்றோ? பகவானைத்தவிர வேறு நினைப்பு அவரிடம் இல்லை.

6. இது நிற்க. பிரகிருதத்தில் ஒரு மஹாபுருஷர் அவதாரம் செய்யப்போகின்றார் என, பிரஹ்மஞான சபையின் தலைவரான மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையாரும் சில பிரமுகர்களும் பிரஸ்தாபிக்கின்றார்கள். பிராஹ்மண குலத்தில் பிறந்து இருக்கிற 16 வயதுள்ள ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி என்பவரின் சரீரம் அம்மஹாபுருஷன் உறைவிடமாகு மென்றும் சொல்லப்படுகின்றது. இத்தன்மையான சம்பவம் உலகத்திற்குப்புதுமையன்று. முன்னர், இயேசு என்பாரின் சரீரம்* ஒரு மஹாபுருஷன் அவதாரமாகும் காலத்தில் அவருக்கு உறைவிடமாக அமைந்ததுபோல, இப்போதும் ஒரு மஹா புருஷனுக்கு உறைவிடமாக, ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் சரீரம் உதவுமென்பதினால் யாதொரு குற்றமும் அஸம்பாவிதமும் ஏற்படவில்லை. முன்னதை நம்பாதவர்களும், அவதாரங்களின் உண்மையை அறியாதாரும் நாஸ்திகர்களும் இதை நம்பார். அத்தன்மையர் மற்றவர் நம்புதலை ஏளனம் செய்தல் நியாயமன்று, அஃது அக்கிரமமானது.

7. ஹிந்துக்களில் சிலருடைய ஆக்ஷேபம்: "கல்கி அவதாரம் கலியுக முடிவில் நிகழும். கலியுகம் ஆரம்பித்து இப்போது 5000 வருஷங்கள் தான் கலியில் சென்றிருக்கின்றன. அதற்குள் அவதாரம் ஏது?" இந்த அபிப்பிராயம் சரியன்று. பிரகிருத அவதாரம் கல்கி அவதாரமென்று, ஒருவரும் சொன்னாரில்லை. ஸ்ரீமத் பாகவதத்தில், தசாவதாரங்களைத் தவிர உலகத்தின் க்ஷேமத்தின் பொருட்டு எத்தனையோ அவாந்தர அவதாரங்களை ஈசுவரன் எடுத்திருக்கிறார். அவருடைய அவதார சக்திக்கு வரம்பு கட்ட நாம் யார்? வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் ஸ்ரீ ராமாநுஜாசார்யரை ஆதிசேஷ அவதாரமென்றும், அநேக ஆழ்வார்கள் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பல அம்சாவ

* 'ஏசுகிறிஸ்து என்பவரின் சரித்திர உண்மை' என்ற மதுரை பிரஹ்மஞான சபையில் வெளிவந்திருக்கிற துண்டு பத்திரிகையைப் பார்க்க.

தாரங்கள் என்றும், சைவ ஸம்பிரதாயத்தில் ஸ்ரீ ஞாந சம்பந்தரை ஸுப்ரஹ்மண்ய அவதாரமென்றும், த்வைத தர்சநத்தில் ஸ்ரீ மத்வாசார்யரை வாயுபகவான் அவதாரமென்றும், அத்வைதமதத்தில் ஸ்ரீ சங்கராசார்யரை மஹாதேவ மூர்த்தியின் அவதாரமென்றும்; இன்னும் இவைபோன்ற அவதாரங்கள் உலகத்திற்கு நலம் உண்டாகும்படி பரமேசுவரன் செய்வித்திருக்கிறார். முற்காலத்தில் ஸம்பவித்திருக்கிறது வாஸ்தவமென்றும் இக்காலத்தில் அம்மாதிரி ஸம்பவிக்கிறது வாஸ்தவமல்லவென்றும் சொல்லுதல் கூடாது.

சமீபகாலத்தில் ஒரு அவதாரம் நிகழும் என, அநேக பிரஸ்தாபங்கள் இப்போது நடமாடுகின்றன. கிறீஸ்து பாதிரியார் ஒருவர், பிரகிருதகால ஸ்திதியை உத்தேசிக்க கிறிஸ்து என்பாரே சமீபத்தில் திரும்பவும் அவதரிப்பார் என்று பிரஸ்தாபித்தாராம். அந்த அவதார புருஷர் கிறிஸ்து மார்க்கத்தினராக இருக்கமாட்டாரென்றும், உலகில் நடைபெறும் பல சமயங்களுக்குள் ஸமாதானம் உண்டு பண்ணவும், ஸமரஸ மதத்தை ஸ்தாபிக்கவும் அவர் ஹீனயமத ஸம்பிரதாயங்களில் ஒன்றில் உதிப்பார் என்றும் சொன்னார்.

இலங்கையிலுள்ள பௌத்தமதக் குருமார் போதிஸத்வாவே ஸமீபத்தில் அவதரிப்பார் என்றும், அவரே, மைத்திரேய புத்தர் என்றும், அவர் பௌத்த மதத்தினர் குலத்தில் பிறவார் என்றும் பிரஸ்தாபிக்கின்றார்கள்.

மகம்மதியர்களின் தேசங்களில் ஹிஜிரி 1334 (1915) முதல் 1366 (1947) க்குள் ஒரு மஹாபுருஷர் உதயமாவார் என, ஞாநிகள் எதிர்பார்க்கிறார்கள். எங்கே பார்த்தாலும், ஞாநிகளும், சித்தர்களும், பக்தர்களும், சமீபகாலத்தில் ஒரு மஹா புருஷனின் வரவை எதிர்பார்க்கிறார்கள் எனத் தோன்றுகிறது. 1910ளு ஜனவரிமீ 11உயின் கிரகங்களின் நிலையைக் கண்டறிந்து, ஒருஜோதிடநிபுணர், ஒரு மஹாபுருஷன் அவதாரம் ஏற்படவேண்டியதற்கு அநுகூலமாக கிரகங்களின் நிலை இருக்கிறதெனப் பிரஸ்தாபித்தார்.

ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் எழுதியுள்ளதைச் சில மாற்றங்களுடன் அடியில் வருமாறு வரைந்துள்ளேன்.

தற்காலத்தில் உலகத்தின் நிகழ்ச்சி.

(1) மேல் திசையிலும், கீழ்திசையிலும் இப்போது தோன்றும் தோற்றங்கள் எதைச் சூசிப்பிக்கின்றன? எந்த இரக்ஷகர் அவதரிக்க எத்தனித்திருக்கின்றார்?

(2) யுகக்கணக்காய் நித்திரைகொண்ட சீனதேசம் இப்போது விழித்திருக்கின்றது காண்! உதய சூரியன் திசையிலுள்ள ஜப்பான்தீவு வியாபாரத்திலும் பீரங்கியைக் கைக்கொள்ளுவதிலும், மேன்மைபெற்று வருவது கீழ்நாட்டார் மேல் நாட்டாருடன் போட்டி போட்டுச் சதுரர்களாவார்கள் என்பதைக் காட்டுகின்றதன்றோ? மஞ்சள் நிறத்தினரும், கருப்பு நிறத்தினரும், மங்கோலியரும், மூர்களும், மநுஷ்ய வர்க்கத்தினர்களாகத் தாமும் இருக்கிறோம் எனக் காட்டுவதற்கு முன்வந்திருக்கிறார்கள் பார்!

(3) மேல்நாட்டாரையும், கீழ்நாட்டாரையும் ஒற்றுமையாக வாழும்படி செய்யும் தகைமையுடையவர் யாரோ?

(4) அன்று ஆலின் (போதி விருக்ஷத்தின்) நிழலில் ஞான தேஜஸ் பெற்றவர்தான் வருவாரோ? ஜார்டன் பொட்டலில் முன் அவதரித்த ஞான தேசிகர்தான் வருவாரோ? பார்ஸீகதேசத்தின் உயர்நலம் அமைந்த சத்குருவாகிய பஹாஉல்லா என்பவர்தான் வருவாரோ? கோபிகைகளுடன் விளையாடின ஊர்த்வரேதஸ் ஆன ஸ்ரீகிருஷ்ணபகவான் தான் வருவாரோ? ஞானமூர்த்தியான ஸ்ரீசங்கராசார்யரே அவதரிப்பாரோ?

(5) கீழ்நாடு மேல் நாட்டுடன் சேர்வதாகவிருந்தால், ஈசுவராநுக்ரஹமின்றி இயலாது. ஒரேமாதிரி தேவர் இருவரின் ஹிருதயங்களிலும் உறைவிடம் பெறவேண்டும்.

(6) கொரான்தான் உண்மைநூல் என மதிப்பான் முஸல்மான்; வேதம்தான் ஞானமுறைநூல் எனக் கருதுவான் ஆரியன். மோஸேயும் தீர்க்கதரிசிகளும் உபதேசித்த நூல்தான் ஞானமுறை பற்றியது என யூதன் எண்ணுவான். எங்கும் நிறைந்த ஈசனை உபதேசிக்கும் நூல் காஸ்பல் எனச் சொல்லுவான் கிறிஸ்துவன்.

(7) ஆனால் எல்லாரும், படிக்கின்றபாடம் ஒன்றே! பொருள் ஒன்றே! புத்தகங்களின் வேற்றுமையால் என்ன?

(8) ஈசன் ஒன்றே! மனிதகுலம் ஒன்றே! யாவரும் அறிய வேண்டுவதும் நன்னம்பிக்கை பெற வேண்டுவதும் ஒன்றே!

மரமும், வாக்கும்கடந்த பொருளைக்குறிக்கும் ஸஹிருதமான வார்த்தை அன்பே! மேல்நாட்டினும், கீழ்நாட்டினும் எவ்வளவு ஆழ்ந்து அகன்று கற்றாலும், ஆராயினும் சித்தாந்தத்தின் உண்மை இதுவே. "அன்பே இறைவன்."

(9) உடல் கருப்பாயிருக்கில் என்? வெளுப்பாயிருக்கில் என்? சிவப்பாயிருக்கில் என்? பொன் நிறமாய் இருக்கில் என்? வேறு எந்நிறமாய் இருக்கில் என்? ஆவின்பால் ஒரே வெண்மையே! ஹிருதயத்தில் நிற்கு மீசன் ஒன்றே! அவன் அன்பேயாம்.

அவதார புருஷரின் வரவை அங்கீகரிக்குமுறை யாதெனில், துவேஷ புத்தியைத் தொலைத்தலும், பிறரிடம் நலம்கண்டு அன்புடன் ஆதரித்தலும், நன்றே நினைத்தலுமாம். இவ்விதம் உலகத்தில் ஸமரஸபுத்தி ஏற்பட்டு ஜநஸமூகத்தில் மதச் செருக்கினாலும் அகங்காரத்தாலும் உண்டாகும் துவேஷ புத்தியானது அற்றுச் சில பேர்களாயினும் நல்வழிப்படுவாராகில், வரும் அவதார புருஷரை அன்புடன் ஆதரித்து உலகத்திற்கு நன்மையுண்டாகும்படி செய்தல் கூடும். வரும் அவதார புருஷனை உலகத்தார் ஏற்று நன்னம்பிக்கை கொண்டு நலம் பெறுவாராக.

குறிப்பு:—இவைகளை யெல்லாம் உத்தேசித்து, அத்தகைய மஹா புருஷர் வரவை அன்புடன் ஏற்க ஜநங்கள் ஆயத்தமாக வேண்டுமெனக்கருதி, சில அறிஞர்கள் உதயதிசை நக்ஷத்திர சங்கம் என்று பெயருள்ள ஒரு சபையை 1911ஆம் ஜனவரி மீ 1௳ ஸ்தாபித்திருக்கிறார்கள் அதைப்பற்றி பிரத்தியேகமாக ஒரு பத்திரிகை வெளி வந்திருக்கிறது. இச்சங்கத்தில், எல்லா தேசங்களிலும் இங்கிலாண்டு, பிரான்சு, ஹாலண்டு, இடாலியா, அமெரிக்கா, ஐக்யமஹாணம், ஆஸ்டிரேலியா, முதலிய தேசங்களில் ஆஸ்திக புத்தியுள்ள ஜநங்கள் அநேகர் அங்கத்தினராகச் சேர்ந்துகொண்டு வருகிறார்கள். அதன் கொள்கையில் இது முக்கியமாம்:—

"எவரிடத்திலும் நலம் தோன்றினால், அதைஅறிதலும் ஆதரவு செய்தலும், நன்கு மதித்தலும், வணங்குதலும்,ஞானமுறையில் நம்மின்மிக்கார் மூத்தோர்உபதேசிக்கும் விதிகளைத்தலைமேற்கொண்டு நம்மால் கூடியவரை நடத்தலும்" என்பதாம். ஓம்தத்ஸத்

ப. நா.

## ராமாயண கதாபுருஷர்களின் குணாதிசயங்கள்.
### முக்கியமாய் பரதனைப்பற்றியவை.

(20-ம் பக்கத் தொடர்ச்சி.)

"முதலில் மந்தரை யென்றும் (அப்புறம்) கைகேயி என்றும், இரண்டு வரங்களென்றும், தர்மம் தவறுமே என்று வ்யஸநித்த தசரதனுடைய வார்த்தை யென்றும், இராமன் வனவாஸம் செய்த கதையென்றும் இவைகளெல்லாம் இராவணனுக்கு பயந்துகொண்டிருந்த மூன்று உலகங்களினுடைய பாக்கியக்குவியல்களுக்கு இடப்பட்ட நாமங்களேயாம்"

இவைகளெல்லாம் தமோகுணப் பெருக்கின் தோற்றங்களாகும். ஜடாயு ஒன்றும் செய்யவில்லை. அவனிடத்தில் இராமன் பாராட்டிய அன்பே பெரிது.

"ஜடாயுவானவர் ஆயுள் ஒழிந்தவராய், சரபங்க மஹரிஷி அவருடைய ஸ்வந்த தபோ மஹிமையால் அடைந்ததும் எவ்விதக் குறைவுமற்றதுமான கதியை அடைந்ததுந்தவிர இராமனுடைய கையினால் அவருடைய கண்ணீருடன் சேர்த்துக் கொடுக்கப்பட்டதும் தசரதனுக்குக்கூடக் கிடைக்காதது மான தர்ப்பண ஜலத்தைப்பெற்றார்."

என்று சொன்னபடி தசரதனுக்குக்கூடக் கிடைக்காத உத்தர கிரியையை இராமன் கையினாலடைந்து மகா பிரஹ்மநிஷ்டனாகிய சரபங்க முனிவர் அடைந்த உத்தம கதியை ஜடாயு அடைந்தார். மேலும் ராமனைப் பார்த்தவுடன் ஜடாயு தன் வரலாறுகளைச் சொல்லிவிட்டு,

"இந்தக் காடானது கிரம்பக் கஷ்டத்துடன் ஸஞ்சரிக்கவேண்டியதாகவும், மிருகங்களும் ராக்ஷஸர்களும் நிறைந்ததாகவும் இருக்கின்றது. நான் சீதையைப் பாதுகாத்துக் கொண்டிருப்பேன்."

என்று சொன்னாரே, அந்தப்படி அவர் பர்ணசாலையிலிருந்து சீதையை ரக்ஷித்துக்கொண்டிருக்கும் பக்ஷத்தில் சீதையைத் தனியாக விட்டுவிட்டு லக்ஷ்மணன் போக நிமித்தமிராது. ஒருகால் ஜடாயுவை அனுப்பிவிட்டு சீதையை லக்ஷ்மணன் ரக்ஷித்துக் கொண்டிருந்தாலு மிருக்கக்கூடும். ஜடாயு சொன்ன பிரதிக்ஞையை மறந்து தமோகுணத்தனாய் எங்கேயோ போய்விட்டான். ஒருவித உதவியும் செய்யாத அவனிடத்தில் தன் தகப்பனுக்குச் சிநேகித

னென்கிற ஒரு காரணத்தைக்கொண்டு ராமன் அவ்வளவு அன்பு பாராட்டினர். அது இராமனுடைய பெருமையைக் காட்டுகிறதே தவிர ஜடாயுவின் பெருமையைக் காட்டவில்லை.

4. மற்றவர்களில் கொஞ்சமேனும் ராஜஸம், தாமஸம் கலக்காமல் சுத்தமான சாத்துவிக தர்மத்தையே தன்னுருவமாகக்கொண்டு நடந்தவன் பரதனேயாவன். மற்றவர்கள் அப்பெருமையை யுடையவர்களாகார். ஏனெனில் தசரதனை வெறுத்தும், அவன்பேரிலும் குற்றமற்ற பரதன்பேரிலும் நன்கு ஆராயாமல் குற்றங்களைச் சுமத்தியும், அவ்விருவர்களையும் கொன்றுவிடுவதாகப் பலமுறை சங்கற்பம் செய்தும், ஸ்ரீராமன் அநுசரித்துவந்த உத்தம தர்மத்தைக்கூட இகழ்ந்துபேசியும், குரோதம் என்னும் தாழ்வான பண்புக்கு வசமான லக்ஷ்மணனிடத்தில் ரஜோகுணமானது பிரகாசித்து நின்றது. பராசக்தியும் ஸ்வாதந்த்ர்யாவச்சிந்ந புருஷாகார சைதந்யமுமான மகாலக்ஷ்மியே சீதாதேவியாக அவதரித்தபோதிலும், நாடகசாலையில் போட்ட வேஷத்துக்குத் தக்கவாறு ஆடித்தீர்க்க வேண்டிய சம்பிரதாயம்போல ஸ்வாகூதஸ்த்ரீத்வம் என்னும் இயல்பைக்காட்டி மூன்று சந்தர்ப்பங்களில்பிராகிருத அந்தக்கரண விருத்தியுடையவள் போல ரஜோகுணம் பெருகி நடந்திருக்கிறாள். அதாவது அயோத்தியை விட்டுப் புறப்படுவதற்குமுன் ஸ்ரீராமன் சீதையை நோக்கி

"ஸரியான காலத்தில் எழுந்திருந்து விதிப்பிரகாரம் தேவதைகளைப் பூஜித்து எனக்குப் பிதாவும், ஜநங்களையெல்லாம் ஆளுகிறவருமான தசரதரை நீ வணங்கவேண்டும். என் தாயாராகிய கௌஸல்யை வயஸ் முதிர்ந்தவள். மகாவருத்தத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறாள். ஆனால் தர்மம் போகும் வழியிலேயே அவள் செல்லுகின்றவள். அவளுக்கு நீ மரியாதை செய்ய வேண்டும்."

என்று தனக்குநேர்ந்த நிலைமையைத் தக்கவாறு ஆராய்ந்து உபதேசித்தபொழுது சீதையானவள் பலமுறை ஸ்ரீராமனுடன் வாதாடிப் பேசி,

"இவ்விதமாக துக்கப்படுகிற என்னை வனத்திற்குக் கூட்டிப்போக நீ சம்மதிக்காத பக்ஷத்தில் விஷத்தையுண்டாவது, அக்நியில் பிரவேசித்தாவது, ஜலத்தில் விழுந்தாவது நான் மரணத்தை யடைவேன்."

என்று கொடுமையான வசநங்களைச் (அயோத்தியாகாண்டம் 29-வது ஸர்க்கம், 21-ம் சுலோகத்தைப்பார்க்க.) சொன்னதுமல்லாமல் ஸ்ரீராமனையே நிந்தித்தாள். "வரிவிசேஷவாராவவ" மென்று வால்மீகி பகவான் சொல்லுகிறார்.

"நீர் இயற்கையாகப் பெண்பிள்ளை. உமது ஆகிருதி மட்டும் ஆண் வடிவாக இருக்கின்றது. இராம! மிதிலாதிபதியாகிய என்னுடைய பிதா உம்மை மருமகனாக அடைந்தபொழுது உம்மைப்பற்றி என்ன நினைத்தாரோ! நான் சிறு பெண். வெகுகாலமாய் உம்முடன் வாழ்ந்தவள், நடத்தை பிசகாதவள், அவ்விதமான பார்யையாகிய என்னை ஓர் நட்டுவனைப்போலப் பிறர்களுக்குக் கொடுத்துவிட இச்சிக்கிறீர். நான் உம்முடன் கூடவருவதற்கு ஸந்நத்தமாயிருக்கிறேன். என்னை நீர் வநத்திற்குக் கூட்டிப்போகாத பக்ஷத்தில் உடனே நான் விஷத்தைப் பாநம் பண்ணுவேனே தவிர விரோதிகளுடைய கைக்குட் பிரவேசிக்க மாட்டேன். இவ்விதமாகச் சொல்லிச்சோகத்தினால் தவிக்கப்பட்டவளாய், இறக்கமுண்டாகும்படி பேசிக்கொண்டு கதறி, ஆயாஸத்துடன் சப்தித்துக்கொண்டு புருஷனைத் தழுவினாள்"

5. பிறகு ஆரண்ணியகாண்டத்தில் ரிஷிகளுக்கெல்லாம் அபயப்பிரதாநம் செய்து ராக்ஷஸர்களை வதம் செய்கிறேனென்று ஸ்ரீராமன் பிரதிக்ஞைசெய்தவுடன் அப்படிப் பிரதிக்ஞை செய்தது அயுக்தமென்று ஸ்ரீராமனைக் கண்டித்தாள். அவள் சொல்லிய வசநங்களை ஆராய்ந்துபார்த்தால் அவைகள் விநயத்தோடு செய்த நிந்தனையாகவே ஏற்படுகின்றன.

"இவ்வுலகத்தில் காமத்தினாலே மூன்று வித வ்யஸநங்கள் உண்டாகின்றன. அவைகளாவன:—பொய்சொல்லுவது மிகப் பெரிதானது; அதைக்காட்டிலும் பெரிதானவைகள் இரண்டுள்ளன. அவைகளிலொன்று பரதாரத்தை யடைவது. மற்றொன்று முன் மநஸ்தாபமின்றி வலுவிற் சண்டைக்குப் போதலாகும். இராகவ! முன்னர் நீர் பொய்யுரைத்ததில்லை; நீர் இனிமேலும் பொய் சொல்ல மாட்டீர். தர்மத்தைக் கெடுக்கின்ற பரதார இச்சை உமக்கு எப்படி உண்டாகும்? ஏனெனனில் சொந்த தாரத்தினால் எந்நாளும் ரஞ்சிக்கப்படுகின்றீர். தர்மத்திலிருக்கிறீர்? ஸத்தியத்திற்குக் கட்டுப்பட்டிருக்கின்றீர். நீர் பிதாவை முற்றும் பரிபாலநம் செய்கின்றவர். ஸத்தியத்திற்குக் கட்டுப்பட்ட புண்ணியவானாகிய ஸ்ரீமானே! லக்ஷ்மணனுக்கு முன் பிறந்தவரே! சிலாக்கியமான தோற்றத்தையுடையவரே! நீர் இந்திரிய நிக்கிரஹராயிருப்பதை நான் அறிவேன். மூன்றாவதாகிய பிறரு

டைய பிராணனுக்கு ஹிம்ஸையைச் செய்தலாகிய முந்திய விரோதமின்றி வலுவிற்சண்டைக்குப் போதலானது உம்முடைய அறியாமையினால் உமக்கு ஸமீபத்தில் வந்திருக்கின்றது.

இந்த வசனத்தில் அடங்கியிருக்கும் விஷயமாவது, இராகவ என்கிற விளி வேற்றுமையினால் இரகு குலத்தில் பிறந்தவனே என்று சொன்னதினால் உம்முடைய குலத்தின் பெருமையே மேலானது. இரகு வம்சத்தில் பிறந்த உமது முன்னவர்கள் வெகு பாடுபட்டு ஸத்தியத்தைக் காப்பாற்றியிருக்கின்றார்கள். நீர் இதுவரையில் பொய் சொல்லாததும், இனி நீர் பொய் சொல்லாமலிருப்பதும் உமது குலத்தின் பெருமையாலன்றி உம்முடைய முயற்சியாலமைந்ததன்று. சொந்த ஸ்திரீ ரம்யமில்லாத பக்ஷத்தில்தான் ஒருவன் அந்ய ஸ்திரீயை நாடுவன். என்னால் நீர் ரஞ்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது உமக்குப் பரதார இச்சை யெப்படி வரும்? நீர் தசரதன் வயிற்றிற் பிறந்தவர். நீர் பிதாவினுடைய உத்தரவுகளுள் நடந்துகொண்டு அந்த நிர்ப்பந்தத்தின்மேல் தர்மத்தையும் ஸத்யத்தையும் அநுஸரித்து வந்திருக்கிறீர். இலக்ஷ்மணன் உமது தம்பி (தகப்பனுடைய குற்றத்தைப் பொறாமல் அவரையும் கொன்றுபோடுவதற்கு ஸங்கல்பம் செய்த சூரன் என்பதாம்). [illegible] பார்வைக்கு மிகவும் ஒழுங்காக இருக்கிறவா தான். நீர் எவ்வளவுக்கு ஆசையற்றவர் என்பதை நான் அறியமாட்டேனா என்பதாகவும் அதாவது உமக்குப் பரதார இச்சை இல்லாமலிருத்தற்கு இத்தனை காரணங்களிருக்கின்றன. அதுவும் உம்மால் ஸம்பாதிக்கப்பட்டதன்று மூன்றாவதாகிய வலுவிற் சண்டைக்குப் போதலொன்று தான் உமது குலத்திற் கு இயற்கையில்லாமல், உம்முடைய சொந்த அறியாமையினால் ஏற்படும் ஸ்வயார்ஜிதம்.

6. இது தவிர மாரீசனைத் துயர்ந்து ஸ்ரீராமன் போன சமயத்தில் மாரீசன் "ஸீதே" "லக்ஷ்மண" என்று ஸ்ரீராமனுடைய குரலை அநுசரித்துக் கூவினவுடன் இராமனுக்கு விபத்து நேர்ந்ததென்று நினைத்து சீதை லக்ஷ்மணனை உடனே புறப்பட்டுப் போகும்படி சொன்னாள். ஸ்ரீராமனுடைய ஆக்ஞையைத் தலைமேற்கொண்டு அவ்விடம் போகாதிருந்த குற்றமற்ற லக்ஷ்மணனைப் பார்த்து சீதையானவள், பின்வருமாறு சொன்னாள்.

(இன்னும் வரும்.)

பி. எஸ். சுப்பிரமணிய ஐயர்.

# தேகமும் தேகியும்.

1. மனிதன் என்பவன் ஸ்தூலம், சூக்ஷ்மம் என்னும் இரு வகைப் பகுப்பையுங் கலந்துள்ளவன். ஸ்தூலப்பகுப்பை தேகம என்றும் சூக்ஷ்மப்பகுப்பை தேகியென்றும் சொல்லுவார்கள். இவ்விருபகுதிகளும் உண்டென்பது நமக்கு நிதம் உண்டாகும் மூன்று அவஸ்தைகளையுங் கூர்ந்து கவனிக்கும்பொழுது தெளிய விளங்கும். கைவல்லியநவநீதத்தின பின்வருங்கவிகளை ஆழ்ந்து சிந்தித்தால் புத்திக்குத் துலக்கமுண்டாகும்.

இன்னது தேகம் தேகி இவன் எனவுணர்வன் யாவன்.
இன்னவன் தன்னைத்தானென் றறிந்தவனாகுமென்றார்.
சொன்னபின் தேகியார் இத்தூலமல்லாயவென்றான.
பின்னது கேட்டவையர் பீடையும் நகையும் கொண்டார்.

தேகமல்லாமல்வேறே தேகியார்காணென்னென்றாய்,
மோகமாங்கனவில்வந்து முளைத்தவனவனார் சொல்லாய்.
சோகமாங்கனவு தோன்றாச் சுழுத்திகண்டவனார் சொல்லாய்.
ஆகநனவிலென்னும் அறிவுதானேதோ சொல்லாய.

2. இந்த தேகியை ஜீவன் என்றும் ஆன்மாவென்றும் வழங்குவதுமுண்டு. நிதம் நித்திரையில் தேகியானவன், தேகத்தை விட்டுப் பிரிந்து சூக்ஷ்மலோகமாகிய புவர் லோகத்தில் சஞ்சரிக்கின்றான். அவன் அப்படிப் பிரிந்து போகும்பொழுது தேகத்துடன் சம்பந்தம் வைத்துக்கொண்டு போகிறான். அதாவது ஒரு நுண்மையான வெள்ளிய இழை தேகத்தையும் தேகியையும் ஜீவிக்கும் காலத்தில் சம்பந்தப்படுத்தி வைத்துக் கொண்டிருக்கிறது. தேகியானவன் நித்திரையில் புவர் லோகத்தில் சஞ்சரிக்கும் பொழுதும் இந்த இழையானது அறுந்து போகாமல் தேகத்தையும் தேகியையும் சம்பந்தப்படுத்தி வைத்துக்கொண்டிருக்கிறது. ஒருவன் ஆகாசத்தில் படத்தை பறக்கவிடும்போது அஃதை ஒரு நூலால் பிடித்துக் கொண்டிருக்கிறான். அதுபோல சம்பந்தம் தேகத்திற்கும் தேகிக்கும் தூக்கத்தில் உள்ளது. மரணத்தில் தான் இந்த இழை துண்டித்துப் போகின்றது. ஆதலால் தேகியானவன் தேகத்திற்குள் புகுவதற்கில்லாமல் புவர் லோகத்திலேயே நின்று விடுகின்றான. பின்னர் தேகமும் சிதைந்து போகின்றது. உழைப்பில் மொத்துண்டு அலுப்படைந்த தேகம் இளைப்பாறும் பொருட்டே தேகியா

னவன் சற்று தேகத்தை விட்டு நீங்கி புவர்லோகத்தில் சஞ்சரிக்கின்றான். அப்பொழுது தேகம் நித்திரை செய்கின்றதென்கிறோம். தேகி தேகத்திற்குள்ளிருக்குமளவும் தேகம் சுறுசுறுப்பாகவேயிருக்கும். இளைப்பாறுதற்கிடமின்று. புவர் லோகத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்த தேகி மறுபடியும் தேகத்திற்குள் புகுவதை விழிப்பு என்றும், புகும்பொழுது புவர் லோகத்தில் நிகழ்ந்த அநுபவத்தை தேகத்தின் மூளையில் பதிவு செய்து கொண்டு புகுவானேயாகில் அந்த புவர் லோக அநுபவம் விழிப்பில் நமது நினைவுக்கு வருகின்றது. அதைக் கனவு என்றும் கூறுகின்றோம்.

3. ஜீவியகாலத்தில் ஜீவனானவன் ஸ்தூலதேகத்தை விட்டுப் பிரிவதேயில்லையென்றும் பிரிந்தால் மரணமேயன்றி வேறொன்றுமில்லையென்றும் சாதாரணமாய் உலகில் ஜனங்கள் எண்ணுகின்றார்கள். ஆனால் ஜீவியகாலத்தில் தேகி தேகத்தை விட்டுப்பிரிந்து வேறிடத்திற்குச் சென்று அவ்விடத்தில் சிலர் கண்களுக்குப் புலப்படும்படி தோன்றி சில தொழில்களும் செய்ததாகத் திருஷ்டாந்தங்கள் அநேகம் உள. அவைகளில் இரண்டு பின்வருவன.

(1) மூர்ச்சாவஸ்தையில் உதவிவேண்டல்:

டாக்டர் லீ என்பவர் "தோற்றங்களும் சூக்ஷ்மரூபங்களும்" என்று பெயரிட்டு எழுதியிருக்கும் புஸ்தகத்தில் 88-வது பக்கத்தில் பூர்ணமாய் நமூதுக்கு வந்த இரண்டு பாதிரிகளைப்பற்றிய ஒரு சம்பவத்தைக் கூறியிருக்கின்றார். இப்பாதிரிகளின் நாமங்களை "வால்டர்" என்றும் "பால்" என்றும் வைத்துப் பேசுவாம். வால்டர் என்பவர் ஆக்ஸ்வர்ட் பட்டணத்துக் கல்லூரியில் ஒரு அங்கத்தினர். பால் என்பவர் பதினெண் மயில் தூரத்திற்கப்பால் உள்ள ஒரு கிராமத்தில் மடாதிபதியாயிருந்தார். ஒரு இரவு வால்டர் என்பார் தன் தோழனாகிய பால் என்பவர் மிகப்பயந்து நடுங்கிக்கொண்டிருக்கும் நிலைமையில் தனக்குமுன் தோன்றி, "என்னைப்புதைத்துப் போடப்போகிறார்கள்" என்றுஓலமிட்டுச் சொல்வதாய் தன்புறத்தும் கனவு இரண்டுதரம் கண்டார். மறுநாட்காலை யெழுந்து காலை போஜநமுடித்து நாற்காலியில் உட்கார்ந்திருக்கும்பொழுது கதவைப் பொட்டென்று தட்டும் சத்தம் கேட்டது. "உள்ளேவா" வென்று

சொன்னார். உடனே கதவைத் திறந்து யாரோ உள்ளே நுழையும் சத்தம் புலப்பட்டது. வேலையாள் தான் உள்ளே வந்தான் என்று நினைத்துக்கொண்டு அவர் நிமிர்ந்து பார்க்கவில்லை. தன்னுடைய சிநேகிதனாகிய பால் என்பவரின் பழக்கமான குரலில் "வால்டர் என்னைப் புதைக்கிறார்களே!" என்று திடுக்கிடச்செய்யும்படியாகக் குசு குசு வென்ற சத்தம் காதில் விழுந்தது. வெருண்டு படபடத்து எழுந்துபார்க்கத் தானிருந்த அறையில் ஒருவரையுங்காணவில்லை. விசாரிக்க வேலையாட்கள்யாரும் உள்ளே வந்ததாகத் தெரியவில்லை. சற்றும் தாமதிக்காமல் தன்னுடைய சிநேகிதரைப் பார்க்கப்புறப் பட்டு வேகமாய்ச் சென்றார். மடத்தையடைந்ததும் வாசலில் பிரேதவண்டி நிற்கவும் பால் என்பவரின் தேகத்தைச் சவப்பெட்டிக்குள் அடக்கஞ்செய்து பெட்டிவாய் மூடி முறுக்காணி வைத்து முறுக்கிப் புதைக்கக் கொண்டுபோகும் சமயமாயிருக்கக் கண்டார். உடனே பெட்டியை உடைத்துத் திறக்கவேண்டுமென்றும், பிரேதச்சடங்கு நடத்தப்படாதென்றும், கண்டித்து ஒரே பிடியாய்நின்று பெட்டியினின்றும் பால் என்பவரின் சரீரத்தை எடுத்து ஒரு படுக்கையில் கிடத்தி உஷ்ணமான ஒற்றிடங்கள் கொடுக்கும்படி செய்தார். முடிவில் பிராணன் திரும்புங்குறிகள் தோன்றின. இரண்டொரு தினங்களில் பால் என்பவர் சவுக்கியத்திற்குவந்து அப்பால் ஒன்பது வருஷம்வரை உயிர் வாழ்ந்திருந்தார்.

### (2) "வடமேற்காய் நடாத்து."

ராபர்ட் டேல் அவோன் என்பவர் "மறு உலகத்தின் எல்லையில் இடறி விழ்தல்" என்று பெயர் சூட்டி வரைந்திருக்கும் புஸ்தகத்தில் 242-ம் பக்கத்தில் துன்புற்ற கப்பலினின்றும் ஒரு ஹேதுவால் ஜனங்கள் மீட்கப்பட்ட, உண்மையாய் நடந்து பிரபலமாய் யாவருக்குந்தெரிந்த ஒரு அற்புதமான சரித்திரத்தை யெழுதியிருக்கின்றார். அது அடியில் வருமாறு.

ராபர்ட் ப்ரூஸ் என்பவர் லிவர் புல்லுக்கும் புது ப்ரன்ஸ்விக் கைச்சேர்ந்த ஸேன்ட் ஜான்ஸுக்கும் மத்தியில் வர்த்தகவிஷயமாய்ப் போக்குவரத்தாயிருக்கும் ஒரு பெருங்கப்பலில் முதல்மேட்

என்று சொல்லும்படியான இரண்டாவது உத்தியோகம் வகித்தவர். அதாவது உபாதிகாரி. ஒரு பிரயாணத்தில் மேற்குநோக்கிச் சென்றுகொண்டிருக்கும் பொழுது இறங்கு துறையை விட்டு ஐந்தாறுவாரம் கழிந்து ஒருநாள் நியூபவுண்ட் லண்ட் பான்க்ஸ் என்பதின் கிழக்கு பாகத்தை சமீபித்து வரவும் உச்சிநேரம் காப்டேனும் முன்சொன்ன உபாதிகாரியும் மேல்தளத்திலிருந்து சூரியகதியை நோக்கி நிதானித்துக்கொண்டு அப்பால் அந்தநாள் வேலை எவ்வளவாயிற்று என்று கணக்கிட்டுப்பார்க்கும் பொருட்டு இருவரும் தளத்தினின்றும் கீழிறங்கினார்கள். கேபின் என்னும் கப்பலறை இது. சிறிய அறை, கப்பலின் பின்பக்கத்தை நெருங்கி அடுத்திருந்தது. அந்த அறைக்கு இறங்குவதற்குண்டான குட்டைப்படிக்கட்டு கப்பலின் குறுக்குப் பக்கத்தில் சென்றது. இந்தப் படிக்கட்டை நெருங்கி அதற்கு நேர்எதிரே இந்தப்படிக்கட்டின் சதுரமான அடிப்படிக்குச் சற்று அப்பால் உபாதிகாரியின் கொலுச்சாவடியிருந்தது. அந்த அடிப்படியிலிருந்து போக இரண்டு கதவுகளிருந்தன. ஒரு கதவு பின்புறமாய்க் கேபின் அறைக்குள் திறப்பது. மற்றது படிக்கட்டுக்கு நேர் எதிராய் உபாதிகாரியின் கொலுச்சாவடிக்குள் திறப்பது. கொலுச்சாவடியில் மேஜையானது கதவை யடுத்து முன்புறத்திலிருந்தது. இதனால் யாவராயினும் மேஜை யண்டையில் உட்கார்ந்து தோள்மேல் திரும்பிப்பார்த்தால் கேபின் அறைக்குள் பார்க்கலாம்.

தன்னுடைய உத்தேசத்திற்கு மிகவும் வித்தியாசப்பட்டுத் தான் எண்ணியிருந்தபிரகாரம் வராமையால் கணக்கில் சிந்தையை ஆழச்செலுத்தி அதிலேயே மூழ்கிப்போயிருந்தபடியால் உபாதிகாரியானவர் மாலுமியின் போக்குவரவுகளைக் கவனிக்காதவராயிருந்தார். கணக்கை முடித்தபிறகு திரும்பிப்பாராமல் எனக்கு அக்ஷரேகையும் தீர்க்கரேகையும் இன்னின்னபடி வருகின்றன. அது சரியாயிருக்குமா. உங்களுக் கென்ன வருகிறதையா?" வென்று உரத்துக் கேட்டார். பதில் ஒன்றும் கிடைக்காததால் தோளின்மேல் கடைக்கண்பார்வையாய்ப் பார்த்து காப்டேன் அவருடைய கற்பலகையில் எழுதுவதில் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருப்பதாக எண்ணிக்கொண்டு மறுபடியும் முன் கேட்டபடி கேட்டார். மறுபடியும்

பதிலுத்தரங்கிடைக்கவில்லை. அதன் மேல் அவர் எழுந்து கேபின் அறையின் கதவுக்கெதிரேவந்ததும் காப்டேன் என்று தான் தப்பிதமாய் எண்ணிக்கொண்ட உருவமானது தலையை நிமிர்த்தி அந்த உபாதிகாரி பிரமிக்கும்படி அவர் எப்பொழுதும் பார்த்திராத ஒரு நூதந புருஷனுடைய வடிவத்தைக் காட்டிற்று.

உபாதிகாரியாகிய ப்ரூஸ் என்பவர் பயங்காளியல்லர்; அவர் தன்னை நேராக ஆழ்ந்த சிந்தனையைக் குறிக்கும் மௌநத்துடன் கண் சிமிட்டின்றிப் பார்க்கும் அசைவற்ற பார்வையை எதிரிட்டு நோக்கித் தான் எப்பொழுதும் முன் பார்த்திராத மனிதன் என்று சந்தேகமின்றி துணியவும், அது அவரை மீறிவிட்டது. அவர் அப்பொழுது நின்று அநுமதியின்றி வந்திருப்பவனை யார் என்று விசாரியாமல் காப்டேன் கவனத்தை உடனே கவரும்படியாக அவர் அடைந்திருக்கும் திகிலின்குறிகள் வெளிப்படையாய் முகத்தில் தோன்ற கப்பலின் மேல்தளத்திற்குப் பாய்ந்து ஓடினர். "ஏன் ப்ரூஸ் என்ன பிரமாத காரியம் உமக்கு வந்துவிட்டது" என்று காப்டேன் கேட்டார்.

"பிரமாதகாரியமா, ஐயா? தங்கள் மேஜைபண்டையிருப்பவனர்?"

"எனக்குத் தெரிந்தமட்டிலும் ஒருவனுமில்லை."

"ஆனால் அங்கிருக்கின்றான், ஐயா, ஒரு புது மனிதன் அங்கிருக்கின்றான்."

"புது மனிதன்! அடடா ஆண்மகனே, நீர் கனவு கண்டிருக்கவேண்டும். நீர் உக்கிராணக்காரனையாவது இரண்டாவது உப அதிகாரியையாவது கண்டிருக்கவேண்டும். உத்தரவின்றி வேறு யார்தான் கீழே போகத் துணிவார்கள்?"

ஆனால், ஐயா, அவன் கதவிற்கு நேரே தங்களுடைய நாற்காலியிலுட்கார்ந்துகொண்டு தங்கள் கற்பலகையில் எழுதிக்கொண்டிருந்தான், அப்புறம் அவன் நிமிர்ந்து பூர்ணமாய் என் முகத்தைப் பார்த்தான். இவ்வுலகில் எப்பொழுதாவது ஒரு மனிதனைத் தெளிவா

யும் பூர்ணமாயும் நான் பார்த்திருப்பேனேயாகில் இவனை நான் அப்படிப் பார்த்தேன்."

"அ வ னை !" "யா ரை ?"

"கடவுளுக்குத் தான் தெரியும் ஐயா; எனக்குத் தெரியாது. ஒரு மனிதனை நான் கண்டேன். அந்த மனிதனோ என் ஆயுளில் இதற்கு முன் நான் கண்டவனேயல்லன்."

"ப்ரூஸ், உமக்கேதோ பித்துப்பிடிக்கின்றது போலும். ஒரு புது மனிதனும்; நாம் இறங்கு துறையை விட்டுச் சுமார் ஆறுவாரமாகிறது!"

"எனக்கு அது தெரியும் ஐயா? ஆனாலும் நான் அவனைப் பார்த்தேன்."

"கீழே போய் அது யார் என்று பாரும்." ப்ரூஸ் என்பவர் சற்றுத் தயங்கிப் பின்வாங்கி "நான் பேய் உண்டென்று நம்பினதே கிடையாது. ஆயினும், ஐயா உண்மையைச் சொல்ல, அதை நான் ஒருவனேபோய் நேரேபார்க்க எனக்கிஷ்டமில்லை ஐயா."

"போதும் போதும் எனது சிங்கக்குட்டியே; உடனே கீழே போம். இந்த ஜனக்கூட்டத்திற்குமுன் உம்முடைய முட்டாள்த்தனத்தைக் காட்டிகொள்ளாதேயும்."

"ஒப்பத்தக்கனவற்றைச் செய்வதில் சித்தமுள்ளவன் என என்னையெப்பொழுதுங் கண்டிருக்கின்றீர்கள் என்று நம்புகிறேன்; ஆனால் தங்களுக்கு எல்லாம் நன்றாயிருக்கும் பக்ஷத்தில், ஐயா, நாமிருவரும் சேர்ந்து கீழேபோவதேசரி யென்று நினைக்கிறேன்" என்று ப்ரூஸ் என்பவர் முகத்தின் நிறம் மாறிப்போய்ச் செப்பினர். காப்டேன் படியில் கீழேயிறங்கினர். உபாதிகாரி பின்றொடர்ந்திறங்கினர்.

கேபின் அறையில் ஒருவருமில்லை! கொலுச்சாவடிகளுக்குள் சோதித்தார்கள். ஒரு குஞ்சும் காணக்கிடையாது! "நல்லது இருக்கட்டும் ப்ரூஸ், நீர்கண்டது கனவு என்று நான் சொல்லவில்லையா?" என்று காப்டேன் கூறினர்.

"இப்பொழுது அப்படியெல்லாந்தான் சொல்லவழியாயிருக்கின்றது ஐயா, ஆயினும் அந்த மனிதன் தங்களுடைய கற்பலகையில் எழுதிக்கொண்டிருந்ததை நான் நேரே காணமலிருந்தால் என் பெண்டு பிள்ளைகள் முகத்தில் விழியாமற் போவேனுக!"

"ஆ! கற்பலகையில் எழுதினதா! அப்படியாயின் இன்னும் எழுத்து இருக்குமல்லவோ!" என்று சொல்லிக்கொண்டு காப்டேன் பலகையை யெடுத்தார்.

"இதோ இதோ இருக்கின்றது, உண்மை உண்மை!" என ஆர்ப்பரித்துக்கொண்டு "ப்ரூஸ், இது உம்முடைய எழுத்தல்லவா?" என்ருர்

உபாதிகாரி கற்பலகையை யெடுத்தார். அதில்திட்டமாய்க் கொட்டை கொட்டையான எழுத்தில் "வடமேற்காய் நடாத்து" எனவார்த்தைகள் இருந்தன. "நீர் என்னுடன் பகிடியா ஐயா,செய்கிறீர்?" என்று காப்டேன் வெடுவெடுப்பாய்க் கண்டித்துக் கேட்டார்.

"ஐயா, ஆண்மகனும் மீகாமனுமாகிய என்மேல் ஆணைப்படிக்கு இவ்விஷயத்தைப்பற்றித் தங்களுக்குத் தெரிந்ததைவிட அதிகமாய் எனக்கு ஒன்றுந்தெரியாது. உண்மையைக்கண்டபடியே தான் நான் சொல்லியிருக்கிறேன்" என்று ப்ரூஸ் பதிலளித்தார்.

ஆழ்ந்த சிந்தையில் மூழ்கிக் கற்பலகையை எதிரேவைத்துக் கொண்டு மேஜைக்குமுன் காப்டேன் உட்கார்ந்திருந்தார். கடைசியாய்க்கற்பலகையைத் திருப்பி ப்ரூஸ் என்பவர்முன் அதைத்தள்ளி "வடமேற்காய் நடாத்து" என்று எழுதும் என்று சொன்னர். உபாதிகாரி இணங்கி யெழுதினர். காப்டேன் இரண்டு எழுத்துக்களையும் கூர்மையாய் ஒப்பிட்டுப்பார்த்து அப்பால் "ப்ரூஸ் நீர் போய் இரண்டாவது உபாதிகாரியை இவ்விடம் வரச்சொல்லும்," என்ருர். இரண்டாவது உபாதிகாரி வந்தார். காப்டேன் சொன்னபடி அவரும் அதே வார்த்தைகளை யெழுதினர். உக்கிராணக் காரனும் அப்படியே செய்தான். அப்படியே கப்பல் ஆட்களில் எழுதத் தெரிந்த ஒவ்வொருவரும் தனித்தனியே ஒருவரின் பின்னெருவர்

வந்து எழுதினார்கள். ஆனால் அந்த அந்தரங்கமாய்த்தோன்றின எழுத்துக்கு இப்பலகை யெழுத்துக்களில் ஒன்றாயினும் கொஞ்சமேனும் ஒத்திருக்கவில்லை.

ஜநங்கள் எல்லாம் விலகிப்போனதும் காப்டேன் ஆழ்ந்த ஆலோசனையுடன் உட்கார்ந்திருந்து கடைசியில் “யாராவது மூலை முடக்குகளில் அடக்கமாய் மறைந்திருக்கக் கூடுமோ? கப்பல் முழுமையும் சோதிக்கவேண்டும். அந்தப்பயலை நான் கண்டுபிடிக்காமற் போனால் அவன் கண்பொத்தி விளையாட்டில் வெகு சமர்த்தனாயிருக்கவேண்டும். சகலரையும் மேலே வரச்சொல்லும்” என்று சொன்னார்.

கப்பலின் ஒவ்வொரு மூலைமுடக்கையும் பூர்ணமாய் ஒருகோடியிலிருந்து மறுகோடி வரையும் தேடினார்கள். அதுவும் ஒரு நூதநமான மனிதன், கப்பலில் தோன்றினன் என்னும் செய்தி வெளியேறிப்பரவிவிட்டபடியால் ஆராய்ந்து காணவேண்டும் என மூண்டெழும்பிநிற்கும் அவா எவ்வளவு உண்டுபண்ணுமோ அவ்வளவு ஆதுரத்துடன் பூர்ணமாய்த் தேடினார்கள். ஆனால் பிரயாணிகளையும் உத்தியோகஸ்தரையுந் தவிர ஒரு உயிருள்ள பிராணியாவது கிடைக்கவில்லை.

இப்படிப் பலனற்ற சோதனை செய்ததற்கப்புறம் கேபின் அறைக்குத் திரும்பிப்போய், “ப்ரூஸ், இவை எல்லாவற்றினின்றும் நீர் என்ன அபிப்பிராயங்கொள்ளுகிறீர்?” என்று காப்டேன் கேட்டார்.

“சொல்லமுடியாது, ஐயா, நானே அந்த மனிதன் எழுதக் கண்டேன். நீங்களோ, அந்த எழுத்தையே பார்க்கிறீர்கள். அதில் என்னவோ இருக்கவேண்டியது.”

(இன்னும் வரும்.)

தி. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை

ஸ்ரீ:

# ஸ்ரீ சடகோபர் வைபவம்.

(89-ம் பக்கத் தொடர்ச்சி.)

இங்ஙனம், சங்கப்புலவ ரெல்லாரையுங் கவிழ்த்துவிட்டு, சங்கப்பலகை ஆழ்வார் பாசுரமொன்றையுமே தரித்து நிற்பது கண்டு, சங்கத்தலைவன் நடுக்கமுற்று:—

“ ஈயாடுவதோ கருடற்கெதிரே, இரவிக்கெதிர்மின் மினியாடுவதோ,
நாயாடுவதோ வுறுமிப் புலிமுன், நரிகேசரிமுன் நடையாடுவதோ,
பேயாடுவதோ எழிலூர்வசிமுன், பெருமானடிசேர் வகுளா பரணன்
ஓராயிரமா மறையின் றமிழின் ஒருசொற்பொறுமோ உலகிற் கவியே.

என்று ஆழ்வார் விஷயமாகக் கவிசொல்லி அபராத க்ஷமாபநம் பண்ணிக்கொண்டான். பின்னும், அங்கே கிடந்த தமிழ்ப்புலவரெல்லாம் ஆழ்வார் விஷயமாகத் தனித்தனிக் கவிபாடி அபராத க்ஷமாபநம் பண்ணிக்கொண்டார்கள்.* இங்ஙனம் “குரும் ப்ரகாசயேத் தீமாந்” என்றபடி. ஸ்வாசாரியரான ஸ்ரீ சடகோபரது வைபவத்தை “எண்டிசையும் அறிய இயம்புகேன், எண்டமிழ்ச் சடகோபனருளையே” என்றவாறு, ஊரும் நாடும் உலகமு மெல்லாம் அறியும்படி பிரகாசிப்பித்துக் கொண்டு, மதுரகவிகள் சிலகாலம் எழுந்தருளியிருந்து லோகத்தை வாழ்வித்தருளினர்.

இவ்வளவுமே, ஸ்ரீசடகோபர் வைபவமாகப் பிராசீந குருபரம்பரைகள் கூறுவன. இவற்றினும் விசேஷமாக அறிதற்கு வேறு கருவிகள் கிடையா. ஆதலால், மேற்கூறிய செய்திகளோடு நாம் ஒருவாறு திருப்தியடைய வேண்டுவதே. பின்பு நிகழ்ந்த சரித்தை நோக்குமிடத்து, இவ்வாழ்வார் அருளிச்செய்த பிரபந்தங்கள், தேசத்தில் நிகழ்ந்த ஏதோ ஒரு சம்பவத்தால் சிலகாலம் அதிக வழுக்களில்லாமல் போக நேர்ந்த தென்றும், ஸ்ரீவைஷ்ணவ ஆசாரிய கூடஸ்தராய் பின்பவதரித்த மஹாயோகியான ஸ்ரீமந்நாத

---

*சேமம் குருகையோ செய்யதிருப் பாற்கடலோ
நாமம் பராங்குசனோ நாரணனோ—தாமம்
துளவோ வகுளமோ தோளிரண்டோ நான்கோ
உளவோ பெருமானுனக்கு ” என் ஒருகவியும் சங்கத்தார் பாடியதாக வழங்குவது, காண்க.

முனிகள் தம்காலத்தே அப்பிரபந்தங்களைப் பிரபலத்துக்குக் கொண்டு வந்தாரென்றும் தெரியவருகின்றது. இந் நாதமுனிகள், ஷை பிரபந்தங்களை, முற்கூறிய மதுரகவியாழ்வார் சிஷ்யர் பராங்குசதாஸரிடத்தினின்று உபாயமாயறிந்து பெற்று, அவற்றுக்கு இயலுமிசையும் ஆக்குவித்து நாடெங்கும் பிரசித்தம் பண்ணினாரெனவும், அக்காலத்தே, திருவாய் மொழியானது தேவகானத்தோடு தேவதாசிகளாலும் பாடப் பெற்றதெனவும், கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து ஆட்சி செய்துவந்த சோழனது அவைக்களத்தில் ஒரு சமயம் அத்தாசிகளது கானம் அரங்கேற்றி ஆநந்திக்கப்பெற்றதெனவும் குருபரம்பரை கூறுதல் காணலாம்.

இனி இவ்வாழ்வார் அவதாரகாலம் கலியுகம் பிறந்த 43-வது நாளென்று குருபரம்பரைகள் கூறும். இவ்வளவு தூரமான காலத்தே சடகோபரைக்கொண்டு நிறுத்துவதில், நவீந சரித்திர ஆராய்ச்சி வல்லோர்க்குச் சிறிதும் சம்மதமில்லை. நம் ஆழ்வார் மற்ற ஆழ்வார்கட்கெல்லாம் பிந்தியவரென்றும், கி. பி. 10-வது நூற்றாண்டே அப்பெரியார் விளங்கிய காலமாக வேண்டுமென்றும் அன்னோர் கருதுகின்றனர்.* இவர்கள் கூறும் ஏதுக்களில் முக்கியமானவை:—ஸ்ரீசடகோபர், சைவரும, பௌத்தரும், சமணரும் தங் காலத்தே தென்னாட்டில் மிகுந்து ஒருவர்க்கொருவர் வாதம் புரிந்து

* நவீந சரித்திர ஆராய்ச்சியில் சிறந்த வல்லுனராகிய ஸ்ரீமாந் T. A. கோபிநாத ராவ் அவர்கள் அபிப்பிராயப்படி ஸ்ரீமாணிக்கவாசகர் 10-ம் நூற்றாண்டின் கடைசியில் அல்லது 11-ம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்திருக்கிறாரென்றும், அவருக்குப் பிற்பட்டு 11-ம் நூற்றாண்டின் பிற்பாதியில் நம்மாழ்வார் இருந்திருக்க வேண்டுமென்றும் பல காரணங்களுடனே சித்தாந்தப் படுத்தியிருக்கின்றார். அவைகளில் ஒன்று ஸ்ரீ மாணிக்கவாசகர் பாசுரத்தினின்று ஓர் வசநத்தை நம்மாழ்வார் தம்முடைய பாசுரத்தில் எடுத்துபயோகித்திருக்கிறார் என்பதாம்.

மாணிக்கவாசகர் பாசுரம்:—

தாரா யுடையா யடியேற் குன்றா ளிணைக் கன்பு
போரா வுலகம் புக்கா ரடியார்புறமே போந்தேன் யா
னூரா மிலேக்கத் துருட்டா மிலேத்திங் குன்றளிணை யன்புக்
காரா யடியே னயலே மயல்கொண் டழுகுவேனே

வந்தனரென்பதை "இலிங்கத் திட்ட புராணத்தீரும் சமணரும் சாக்கியரும், மலிந்து வாதஞ் செய்வீர்களும் மற்றுமறும் தெய்வமும் ஆகி நின்றான்." என்று குறிப்பித்தலாலும், "ஊரவர் கவ்வை யெருவாக அன்னைசொல் நீராக நீளும் இந்நோய்" என்று திருவள்ளுவர் கூறிய சொல்லும் பொருளும், "ஊரவர் கவ்வை யெரு விட்டன்னை சொன் னீர்மடுத்து, ஈரநெல்வித்தி விளைத்த நெஞ்சப் பெருஞ் செய்யுள்" எனத்திருவாய் மொழியிற் பயிலுதலாலும் திருவள்ளுவர்க்குப் பின்பு, பௌத்த சமணர்கள் இந்நாட்டில் மலிந்து வாதஞ்செய்த காலமொன்றில், நம்மாழ்வார் விளங்கினவராதல் வேண்டும். அன்றியும், இவ்வாழ்வார் பாடிய திவ்ய தேசங்களில் ஸ்ரீவரமங்கலம், வரகுணமங்கை என இரண்டு திருப்பதிகள் உள்ளன. இவற்றுள் முன்னது "சிரீவர மங்கலநகர்" என்றும் ஆழ்வாரால் பாடப்படுகின்றது. இவ்வூரானது, கி. பி. 780-ல் இருந்த பாண்டியன் நெடுஞ்சடையன் அல்லது பராந்தகனால், அவனது 17-வது ஆட்சி வருஷத்தில் "எக்ஞ வித்தைகளோடு எஞ்சாத சாஸ்திரங்களைக் கரைகண்ட ஸுஜ்ஜடபட்டர்" என்ற அந்தண சிரேஷ்டருக்கு, வேலங்குடி என்னும் பழம் பெயர் நீக்கி ஸ்ரீவரமங்கலம் எனப் புதுப்பெயரிட்டு உதகபூர்வமாகத்தானஞ் செய்யப்பட்டதென்று "மெட்ராஸ் மியூஸியம் பிளேட்" என வழங்கும் சாஸனம் கூறுகிறது. இவ்வாறு, கி. பி. 780-க்குப்பின் சிரீவரமங்கலம் என்று புதிதாக வழங்கப்பெற்ற ஊரை ஆழ்வார் பாடினராயின், அவர் அக்காலத்துக்குப் பிற்பட்டே விளங்கினராதல் வேண்டுமன்றோ? "கோற்ற நோன்பிலேன்" என்ற 5-ம் பத்து, 7-ந்திருவாய்மொழிப்பதிகம் முழுதும் இச்சிரீவரமங்கலத்தைப் பற்றியதால் காண்க. இன்னும், வரகுணமங்கை என்ற ஊரும் ஆழ்வார் திருவாக்கிற் பயின்றுளது; "புளிங்குடிக் கிடந்து வரகுணமங்கையிருந்து" என வருதல் காணலாம். இவ்வூர், வரகுணன் என்ற பாண்டியனால் அமைக்கப்பட்டதனால், அப்பெயர் பெற்றதாகும். சமீ

---

நம்மாழ்வார் பாசுரம்:—

மைப்படி மேனியுஞ் செந்தாமரைக் கண்ணும் வைதிகரே
மெய்ப்படி யாலுன் திருவடிச்சூடும் தகைமையினார்
எப்படி யூராமிலைக் கக்குநட்டா மிலைக்கு மென்னும்
அப்படி யானும் சொன்னேன் அடியேன் மற்றியாதென்பனே.

பத்தில், பாண்டிய வமிசாவளியைப் பலதலை முறையளவாக விளக்க வல்ல சாஸநங்கள் சின்னமனூர், வேள்விகுடி என்ற ஊர்களிலிருந்து துரைத்தன சாஸந பரீக்ஷகரால் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றில் கண்ட பாண்டிய அரசரில், மேற்கூறிய ஸ்ரீவரமங்கலத்தைத் தானஞ்செய்த நெடுஞ்சடையனுக்குப் பேரனாகிய பாண்டியனொருவனும்; அவனுக்குப் பேரனாகிய அரசனொருவனும் தவிர வேறெவரும் வரகுணனென்ற நாமந்தரித்தவர்களாகத் தெரியவில்லை. இவ்விரண்டு அரசரில் ஒருவர் பெயரால் வரகுணமங்கை வழங்கப்பட்டதாதல் வேண்டும். அங்ஙனம் ஆகுமிடத்து, அவ்வூரைப்பாடிய ஆழ்வார் காலமும், அவ்வரசர் காலமாகிய 9 அல்லது 10-ம் நூற்றூண்டுகளேயாகத் தடையில்லையாம்.

இவையன்றி, நாதமுனிகள் என்ற ஆசாரியர், நம்மாழ்வார் சிஷ்யர்க்கு சிஷ்யராகிய பராங்குசதாஸர் மூலமாகத்திருவாய்மொழி முதலிய திவ்யப்ரபந்தங்களைப் பெற்ற செய்தி மேலே கூறினோம். இங்ஙனம், ஆழ்வாருடைய ப்ரசிஷ்யரிடம் நாதமுனிகள் சென்றிருந்தவராயின், அம்முனிகளுக்கு 60—80 வருஷங்கட்கு முன் ஆழ்வார் எழுந்தருளியிருந்தவரென்பது பெறப்படும். ஷை நாதமுனிகள், கி. பி 1024-ல் தன் வெற்றிக்கு அடையாளமாக இராஜேந்திர சோழன் புதியதாக அமைத்த கங்கைகொண்ட சோழபுரத்தில் அவ்வரசனவைக்குச்சென்று வந்தாரென்று குருபரம்பரை கூறுதலால், ஏறக்குறைய 11-ம் நூற்றூண்டில் அந்நாதமுனிகள் இருந்தவரென்பதும் விளக்கமாம். ஆகவே, அம்முனிவர் நம்மாழ்வாருடைய சிஷ்யருக்கு சிஷ்யரைக் கண்டாரெனில், ஆழ்வார்காலம் 10-ம் நூற்றூண்டைக் கடவாதென உத்தேசிக்கலாம். இவற்றால், நம்மாழ்வார், இற்றைக்கு 1000 வருஷங்கட்குள் விளங்கியவரென்பதே பொருத்தமாகும். இவைகளே இக்காலத்துச் சரித்திரமாராய்வோர் கூறும் ஏதுக்களில் முக்யமானவை. இவர் கூறுவன பெரும்பாலும் நியாயவாயிலாகக் கூறப்படுவன ஆயினும், சிலவிஷயங்கள் ஆக்ஷேபத்துக்கு உரியவை. என்றாலும், இன்னோர் கூறும் முடிபு, ஆராயத்தக்கதேயன்றி, அவசரப்பட்டுத் தள்ளக் கூடியதன்று.

இன்னும் வரும்.

மு. இராகவன்.

163

## வருஷம்: அதன் உண்மை.

---

பூமி ஒருதடவை சூரியனைச் சுற்றிவரச் சுமார் 365¼ நாட்கள் செல்லுகின்றன. இவ்வாறு 365¼ நாட்கள் கொண்ட காலத்துக்கு "ஸௌர வருஷம்" என்று பெயர்.

பூமி சூரியனைச் சுற்றி வருவதாலேயே ரிதுக்கள் (seasons) ஏற்படுகின்றன. மேற்கூறிய ரிதுக்களின் பரிவர்த்தனங்கள், சுமார் 360 தினங்களில் திரும்பத் திரும்ப ஏற்படுவதால், அக்கால அளவைக் குறிக்கும் காலமே 'வர்ஷம்' என்று ஏற்பட்டதாய்த் தெரியவருகின்றது. இக்காலவரை பெரும்பாலும் சூரிய கதியை அநுசரித்திருப்பதால், இதற்கு 'ஸௌரவர்ஷம்' என்று பெயர்.

இது தவிர நமது முன்னோர்கள் முன் ஒருகாலத்தில் உத்தர துருவ ப்ரதேசங்களில் வசித்துவந்தனரென்றும், அங்கே, பகல் ஆறுமாதம், இரவு ஆறுமாதமாக அமைந்திருப்பதால் அவ்விரண்டு கால அளவுகளின் மொத்தமே வர்ஷமென்று ஏற்படுத்தப்பட்டிருக்கலாம் என்றும் வேறொரு வித்தாந்தமும் உண்டு.

### ஸௌரவர்ஷம்: (1) நிரயநம், (2) ஸாயநம்.

மேற்கூறிய ஸௌரவர்ஷமானது 'நிரயந வர்ஷம்,' என்றும் ஸாயநவர்ஷம்' என்றும் இரண்டுவிதமுண்டு.

'நிரயந வர்ஷம்' என்பது, சூரியன் குறிப்பிட்ட ஓர் ஸ்தாநத்தினின்று புறப்பட்டு மறுபடி அதே ஸ்தாநத்துக்கு வரச்செல்லும் சுமார், 365¼ நாட்களுள்ள காலத்துக்குப் பெயர்.

உதாஹரணம்: குறிப்பு:—"ரேவத்யந்தம் மேஷம்" சூரியன் மேஷாதியாகிய '0' ஸ்தாநத்தினின்று புறப்பட்டு மறுபடி அந்த ஸ்தாநம் வந்துசேரச் செல்லக்கூடிய காலந்தான். இந்தக் கணநமானது விஷுவத்களின் அபஸரணங்களையாவது, ரிதுக்களின் பரிவர்த்தனங்களையாவது சார்ந்திருக்கவில்லை. இந்த கணநந்தான் விசேஷமாய் ஹிந்துக்களின் ஜ்யோதிஷ நூல்களில் அநுஷ்டிக்கப்பட்டு வந்திருக்கின்றது.

'ஸாயந வர்ஷம்'.—என்பது விஷுவத்கள், ரிதுக்கள் இவைகளின் அபஸரண விதியைச் சார்ந்தது. விஷுவத்கள் ஒவ்வொரு வருஷ

மும், சுமார் ஒரு நாழிகைக்கு முன்னதாகவே ஏற்படுகின்றனவாதலாலும், அவைகளின் துவக்கத்தைச் சார்ந்தே ஸாயநவர்ஷமும் துவங்குவதாலும், இவ்வருஷமும், நிரயந வருஷம் ஏற்படுவதற்குச் சுமார் ஒரு நாழிகைக்கு முன்பாகவே துவங்குகின்றது. ஆகையால் நிரயநவர்ஷத்தைவிட ஸாயந வர்ஷமானது சுமார் ஒருநாழிகைக்குள்ளாகவே இருக்கின்றது. இது பெரும்பாலும் ஐரோப்பாதேசங்களின் ஜ்யோதிஷ சாஸ்திரங்களில் (Nautical astronomy) அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

மேற்கூறிய இரண்டு கணநமும் சூரியகதியைச் சார்ந்தவை.

## சாந்த்ரமாந வர்ஷம்.

இது சந்திரனுடைய கதியை அநுஸரித்து அமையப்பெற்றது. ஒவ்வொரு சாந்த்ர மாஸமும் $29\frac{1}{2}$ நாட்கள் கொண்டது. ஆகையால் 12 சாந்த்ர மாஸங்கள் கொண்ட ஓர் சாந்த்ர வர்ஷமும் $29\frac{1}{2} \times 12$ சுமார் 354 திநங்களடங்கியிருக்கின்றது.

இவ்விதமான சாந்த்ர வர்ஷமானது இயற்கையாய் சூரியகதியையாவது, விஷுவ அபஸரணங்களையாவது ரிதுக்களின் நிலையையாவது அநுசரிக்கவில்லை.

ஆகிலும் 354 நாட்கள் கொண்ட இந்தச் சாந்தர வர்ஷமானது $365\frac{1}{4}$ நாட்கள்கொண்ட ஸௌர வர்ஷத்துடன் இணைபெறும் பொருட்டு சில ஏற்பாடுகள் செய்திருக்கின்றார்கள்.

அவையாவன:—ஒவ்வொரு சாந்த்ர வர்ஷ அந்தியத்திலும் 11 அல்லது 12 அதிகதிநங்கள் (Intercalary days) சேர்ப்பது ஓர் அநுஷ்டாநம். இவ்வநுஷ்டாநமானது முன் வேத காலங்களில் விசேஷமாய் வழங்கிவந்ததாய் அநேக ஆதாரங்கள் அகப்படுகின்றன. இந்த 11 அல்லது 12 திநங்களும் வைதிக கர்மங்களுக்கு வர்ஜ்யமானவை. இவ்வித கணநமானது [$(29\frac{1}{2} \times 12) + 11$ அல்லது 12 திநங்கள்] இக்காலத்தில் அநுஷ்டாநத்திலிருப்பதாய்த் தெரியவில்லை.

இரண்டாவது மேற்கூறியவாறு ஒவ்வொரு வருஷமுடிவிலும் 11 அல்லது 12 அதிக திநங்களைச் சேர்ப்பதைப் பார்க்கிலும், சுமார் $2\frac{1}{2}$ வருஷங்களுக்கு ஒருதடவை ($12 \times 2\frac{1}{2} = 30$ திநங்கள்) கொண்ட ஒரு அதிக மாஸம் (Intercalary month) சேர்த்து வருவதுண்டு. இவ்வித கணநத்தால், எல்லா சாந்த்ர மாஸமும் சுக்ல ப்ரதமை யிலேயே ஆரம்பமாகும். எந்த சமயத்தில் அதிக மாஸம் சேர்க்க வேண்டு மென்பதற்கு ஓர் விதியுண்டு. அதாவது எந்த ஸௌர மாஸத்தில் இரண்டு அமாவாஸ்யைகள் ஏற்படுகின்றனவோ, அவை களில் இரண்டாவது அமாவாஸ்யைக்கு முந்தின சாந்த்ரமாஸத்தை அதிக மாஸம் என்றும், அதற்குப் பிந்தினதை நிஜமாஸம் என்றும் சொல்லுவதுண்டு.

உதாஹரணம்:—சித்திரை மாஸம் முதல் திநத்தில் ஓர் அமா வாஸ்யையும், 30-வது திநத்தில் ஓர் அமாவாஸ்யையும் ஏற்பட் டால், 2-வது திநத்தில் துவங்கும் சாந்த்ர மாஸத்தை அதிக வை சாக மென்றும், 31–வது திநத்தில் துவங்குவதை நிஜ வைசாக மென்றும் சொல்லுவார்கள்.

இவ்வித அதிக மாஸமானது சுமார் $2\frac{1}{2}$ வருஷங்களுக்கு ஒரு தடவை, அல்லது 5 வருஷம் கொண்ட யுகத்தில் (Five years' cycle) இரண்டு தடவை ஏற்படும்.

இவ்விதச் சாந்த்ரமாஸமானது தக்ஷிண தேசத்தில் வைதிக கர்மங்களுக்கு மாத்திரம் உபயோகிக்கப்படுகின்றது. லௌகிக கண நங்களுக்கு ஸௌரமாஸமே வழங்கிவருகின்றது. சாந்த்ரமாஸம் வழங்கிவரும் உத்தரதேசங்களிலும், மேற்கூறியவாறு ஸௌரமா ஸத்துக்கு இணக்கியே இஃது அநுஷ்டிக்கப்பட்டுவருகிறது.

ஹிந்துக்கள் சம்பந்தப்பட்டமட்டில் வைதிக, லௌகிக இரு முறைகளுக்கும் முற்றிலும் சாந்த்ரமாஸமே வழங்கிவருவதாய்த் தெரியவில்லை.

## ஸாவநவர்ஷம்.

இது சுத்த லௌகிக முறையைச்சார்ந்தது. இது ஸூர்ய கதியை யாவது சந்திரகதியையாவது சார்ந்ததல்ல, ஸௌகர்யத்தின் பொரு

ட்டு. 30 திநங்கள் கொண்டது ஓர் ஸாவந மாஸமாகவும், அவ்வாறு 12 ஸாவந மாஸங்கள் கொண்டது (360 திநங்கள் கொண்ட) ஓர் ஸாவந வர்ஷமாகவும் மேற்கூறிய சாந்த்ர ஸௌர மாநங்கள் ஏற்படுவதற்கு முன், முற்காலத்தில் நமது தேசத்தில் வழங்கிவந்ததாய்த் தெரியவருகின்றது. அடியிற்கண்ட வசநம் இங்குகவனிக்கத்தக்கது.

"த்ரீணி சவைஶதாநி ஷஷ்டி: ச ஸம்வத்ஸரஸ்யாஹாநி தாவத் ஸ்ம்வத்ஸர:" (ஐதரேய ப்ரா. 2, 17)

பின்பு ஸௌர மாநம் ஏற்பட்டபொழுது 5 ஸாவந வர்ஷங்கள் +1 ஸாவந மாஸம் = 4 ஸௌர வர்ஷங்களாகவும், 5 சாந்த்ர வர்ஷம் +1 சாந்த்ர மாஸம் = 5 ஸாவந வர்ஷங்கள். (அல்லது ஒரு சாந்த்ர வர்ஷம் (354) + 6 திநங்கள் ஒரு ஸாவந வர்ஷமாகவும் இணைக்கப்பட்டுவந்தன.

ப்ருஹஸ்பதி மாநம்.

இது ப்ருஹஸ்பதி (வியாழன்) கதியை யதுஸரித்து அமைந்துள்ளது. ப்ருஹஸ்பதி ஒருதடவை சூரியனைச் சுற்றிவரச் சுமார் 4332 நாட்கள் (அல்லது 12 ஸௌரவர்ஷம், 51 நாட்கள்) செல்லுகின்றன. அதாவது 30 அம்சங்கள் கொண்ட ஒரு ராசி செல்லச் சுமார் 361 நாட்கள் ஆகின்றன. 361 நாட்கள்கொண்ட இந்தக் கால அளவுதான் ஒரு ப்ருஹஸ்பதி வர்ஷம் என்று சொல்லப்படும். சுமார் 85 ஸௌர வர்ஷங்கள் 86 ப்ருஹஸ்பதி வர்ஷங்களுக்குச் சமமாயிருக்கும். துல்யமாய் 85 $\frac{65}{211}$ வர்ஷத்துக்கு ஒரு ப்ருஹஸ்பதி வர்ஷம் அதிகமாகின்றது. பொதுவாக ப்ருஹஸ்பதி வருஷங்கள், ப்ரபவாதி அக்ஷய ஈறாக 60 வருஷங்களாகப் பெயரிடப்பட்டிருக்கின்றன. இவ்வாறு 60 வருஷங்கள் கொண்டது ஒரு ப்ருஹஸ்பதி யுகம் (Brihaspathi's Cycle) என்ற பெயர்.

(இன்னும் வரும்)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர்.

# புத்தகவரவு.

---

மோகனதாஸ் காந்தி என்பவரின் சரித்திரம்:—இது தென் ஆபிரிக்காவில் இந்தியர்களின் தலைவரான காந்தி என்பாரின் சரித்திரத்தை நம் தமிழ்நாட்டார் அறிந்துகொள்ளும்படியாக எளிய தமிழ்நடையில் ஸ்ரீமான் ஆர். நாராயணஸ்வாமி ஐயர் அவர்கள் எழுதிப் பிரஸித்தம் செய்துள்ளார். தென் ஆபிரிக்காவில் நம் நாட்டாருக்கும் வெள்ளைக்காரர்களுக்கும் சில வருஷங்களாக வியாபார முதலான முறைகளின் காரணமாகப் போட்டி ஏற்பட்டு அநேகவிதமான கஷ்டங்களுக்கும், கொடுமையான சர்க்கார் நிர்ப்பந்தங்களுக்கும், உள்ளாகி வருந்திக்கொண்டு வருகிறார்கள். மோகநதாஸ்காந்தி என்பார் பம்பாய் ராஜதானியைச் சேர்ந்த ஹிந்துவாவர். இவர் பாரிஸ்டர் டிகிரிபெற்றவர். இவர் நம்மவர்களின் தலைவராக இருந்துகொண்டு வெள்ளைக்காரர்கள் என்ன கொடுமைகள் செய்தாலும் அவைகளுக்கு மாறாக எவ்விதக்கெடுதிகளும் செய்யாமல் நம்மவரை நல்வழிப்படுத்தியும், பொறுமை பாராட்டும்படி செய்வித்தும், நம்மவர்களின் கஷ்ட நிஷ்டூரங்களை, நம்மை ஆளும் ஆங்கில இராஜாங்கத்தாருக்கு அப்போதைக்கப்போது, மனு மூலமாயும் நேரிலும் தெரிவித்தும், நம்மவர்களின் யோக க்ஷேமத்தின் பொருட்டு சலிக்காமல், தைரியமாய் நற்காரியங்கள்செய்துவரும் தீரர் இவர். இவர் கர்மயோகி. உயர்ந்த சீலமும் அகன்ற கல்வியும் விரிந்த உலக அறிவும் உள்ளவர். இவர் சரித்திரத்தை நம்மவர் ஒவ்வொருவரும் நன்றாய் வாசிக்க வேண்டுவது. அதற்கு அநுகூலமாக ஸ்ரீமான் நாராயணஸ்வாமி ஐயர் அவர்கள், இப்புத்தகத்தை எழுதி அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றார்கள். இதன் விலை 8 அணா. அவர்களுக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம். அவர் விலாசம் ஆர். நாராயணஸ்வாமி ஐயர், அப்பன் வில்லா, 44 நம்பர் ஆர்மீனியன் தெருவு, சென்னை.

---

ஹிந்து பைபில் என்னும் ஆரியர் சத்தியவேதம் இரண்டாம்பாகம்:—இது கோயம்புத்தூர் கலாநிதி பத்திராதிபரும், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் ஓர் அங்கத்தினருமாகிய சேலம்பகடால நரசிம்மலுநாயுடு அவர்கள், தமிழ் வாலிபர்களின் உபயோகத்திற்காக நம்முடைய ஹிந்துமத சாஸ்திரங்கள் என்ற அரண்ணியத்தில் ருசியானவும் பிரயோஜனகரமுமான பல காய், கனிகளை மிகவும் ஆராய்ச்சியுடன் பொறுக்கி, எளிய தமிழில் தொகுத்து, வெளியிட்டிருக்கிற ஒரு பெரிய திரட்டாம். பிரஹ்ம லக்ஷணம், பிரபஞ்ச லக்ஷணம், ஆத்ம லக்ஷணம், பக்தி லக்ஷணம், பிரார்த்தனைகள், இராமாயண ரகஸியார்த்தம், மஹாபாரத ரகஸியார்த்தம் முதலியன இதன்கண் விஸ்தாரமாக விவரிக்கப்பெற்றிருக்கின்றன. இப்புத்தகம் ஒவ்வொரு ஹிந்துவின் கையிலும் இருக்கவேண்டியது அவசியமானது. இந்தப்புத்தகத்தின் பெயர் சிலருக்கு அருவருப்பை உண்டுபண்ணலாம். நம்முடைய கிறிஸ்து

சகோதரர்கள், தங்களுடைய மத புத்தகமாகிய பைபிலை சத்திய வேதம் எனச் சொல்லுகிறவண்ணம், ஸ்ரீமான் நரசிம்மலுநாயுடு அவர்கள், நம்முடைய சநாதந தர்மமாகிய ஆரியர் மத சாஸ்திரத்தை "பைபில்" என்று அழைப்பதால் குற்றமில்லை. ஆயினும், அதற்கு இயற்கையாக ஏற்பட்டுள்ள உயர் நலமுள்ள பெயரைத் தவிர்த்து, புதிதாய் அந்யபாஷையில் காரண இடுகுறியாய் வேறு புத்தகத்திற்கு வழங்கும் பெயரை நம்முடைய மத சாஸ்திரத்தின் தொகுதிக்கு வைத்து அழைத்தல் அவ்வளவு நலமன்று எனவே நமக்கும் தோன்றுகிறது. கிறீஸ்து நண்பர்களைப்பார்த்து, போட்டியாக, இப்பெயரை நம்முடைய மதசாஸ்திரத்தின் தொகுதிக்கு பைபில் என்ற நாமத்தை வைப்பதினால்,நம்முடைய மதசாஸ்திரத்திற்கு ஒரு கௌரவமும் மஹிமையும் உண்டாகா. அநாவசியமாக உயர்ந்த விஷயத்தைப்பற்றி பிறர் ஏளனம் பண்ணுதலுக்கு இடமாகும். இச் சிறு குறையைத்தவிர, இப்புத்தகத்தைப் படிப்பவர் நம் மதத்தைப்பற்றியும், அது சம்பந்தமான கணக்கில் அடங்காத ருஷிகள், ஆசாரியர்கள், ஞாநிகள், சித்தர்கள், யோகிகள் இவர்களைப்பற்றியும் உயர்ந்த பக்தியும் விசுவாசமும் பெறுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. தவிரவும் பிறர்மதத்தைப்பற்றிப் பொறுமையும் பாராட்டுவர். இப்புத்தகத்தால் ஜநஸமூகத்தில் பிறர் மதத்துவேஷமும் குன்றும். இதிலடங்கிய பலவாறான விஷயங்களை நோக்க இதன் விலை ரூ 1—8—0 அதிகமன்று. கிரந்தகர்த்தரிடமிருந்து இதை விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

---

## பத்திரிகை வரவு.

சக்ரவர்த்தினி:—என்னும் பெயருள்ள மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை சென்றஏழுவருஷங்களாக நம்தமிழ்நாட்டில் நடைபெறுகின்றது.நாளிது௵ ஜூன்மாதம் முதற்கொண்டு லோகோபகாரியின் பத்திராசிரியரான வித்வான் கோ. வடிவேலுசெட்டியார் அவர்கள் அப்பத்திரிகையை நடத்தி வருவார்கள் என அறிய சந்தோஷிக்கிறோம். முன்னரைவிட இப்பத்திரிகையில் ஞாந விஷயங்கள் இன்னும் அதிகமாக வெளிவரும் என்பது நிச்சயம். நம்மவர் இத்தகைய பத்திரிகையை ஆதரிப்பார்கள் என நம்புகிறோம். இதன் வருஷ சந்தா ரூ 2 தான்.

---

## சமாசாரம்.

ஸ்ரீமாந் எஸ். வேங்கோபாசாரியர் அவர்களின் மரணம்:— மதுரை காலேஜ் பிரதம உபாத்தியாயர் ஸ்ரீமாந் எஸ். வேங்கோபாசாரியர் B. A. அவர்கள், 1912௵ ஜூலைமீ 17உ புதன்கிழமை காலையில் திடீரென மாரடைத்து மரணமாயினர். மரணகாலத்தில் அவர் வயது 60.

மதுரை உயர்தர வித்யாசாலையான காலேஜில் 22வருஷ காலமாய் தலைமை உபாத்யாயராகவிருந்து கல்லூரியின் விஷயங்களைக் கண்ணிமைபோல் காப்பாற்றி நடத்திவந்தார். இவர்கள் காலத்தில் ஷை மதுரை வித்யாசாலையானது சென்னை ராஜதானியில் நன்றாய் நடத்தப்பெற்றுவரும் 2nd grade Collegesகளுக்குள் தலைமைபெற்றது. காலேஜிலும் அது சம்பந்தமான நான்கு விசயாசாலைகளிலும் இவருக்குக் கீழ் கல்விகற்பிக்கும் உதவி உபாத்யாயர்கள் 120 பெயர்களிருக்கிறார்கள். இவர்களுடன் ஸ்ரீமாந் வெங்கோபாசாரியாவர்கள் அன்புடனும், ஸ்நேஹத்துடனும் கார்யாதிகளை நடத்திவந்தார். இவரது கல்வித்திறமையும், பொறுமையும், மாணாக்கர்களுடன் அன்புடன் உறவாடிக்கொண்டிருந்த குணமும் சீலமும் யாருடனும் இன்சொல் பேசும் சுபாவமும் இவருடன் பழகினவர்களின் மநங்களில் வெகுகாலம் தங்கிநிற்கும். இவர் நற்குணமும் முகமலர்ச்சியும் ஏராளமான சிநேகிதர்களை உண்டுபண்ணின. மரணகால பரியந்தம் தமக்கு உயிருக்குயிரான குழந்தைபோல் மதுரை காலேஜைப் பாதுகாத்துவந்தனர். ஆங்கிலப் பயிற்சி பெற்ற அநேகரைப்போல், பணத்தைக் குவிக்கவேண்டுமென்ற ஆசையால் தூண்டப்பெற்று வக்கீல் முதலிய உத்யோகங்களை வகிக்காமல், கல்வி கற்பித்தல் என்ற உயர்நலமமைந்த தர்ம உத்யோகத்தில் தம்வாழ்நாள் முழுமையையும் நலம்படக் கழித்து வந்தார். நம் தேசத்தின் பிரகிருத நிலைமையை உத்தேசிக்க இத்தகையரைத் தான் நலம்செய்யும் புண்யரென மதிக்கலாம். இவர் ஸ்தாநத்திற்கு வருகின்றவர் இவரைப்போல் காலேஜைக் கண்ணும் கருத்துமாக நடத்தி இன்னும் அஃது அதிக மேன்மை பெறும்படி செய்விப்பாரென எதிர்பார்க்கிறோம்.

---

நிலக்கரிச் சுரங்கத்தின் தொழிலாளிகளின் கொடுமையும் அதனின்று விளைந்த நலமும்:—பிரகிருதத்தில் எல்லாத் தொழில்களும் நிலக்கரியின் உதவியால் பெரும்பாலும் நடத்தப்பட்டு வருகின்றன. புகைவண்டி நீராவிக்கப்பல், நாநாவிதமான தொழில்கள் புரியும் யந்திரங்கள் இவைகளெல்லாம் நிலக்கரியின் உபயோகத்தை வேண்டுகின்றன. நிலக்கரி பூமியில் 1000 அடிக்குமேற்பட்ட ஆழமான இடங்களில் சுரங்கங்களில் இருக்கின்றது. அதை வெட்டி எடுக்கிற தொழிலில் ஏராளமான ஜநங்கள் அமர்ந்து வேலை செய்கிறார்கள். இந்நிலக்கரிச் சுரங்கங்கள் ஆங்கிலேய தேசத்தில் அதிகமாக உள்ளன. அதன் காரணமாகத்தான் கைத்தொழில் முயற்சி அத்தேசத்தில் அதிகமாகப் பிரகாசிக்கின்றது. அத்தேசமும் உயர்பதவியைப் பெற்று விளங்குகிறது. இப்போது அந்த தேசத்தில் நிலக்கரிச் சுரங்கங்களில் வேலைசெய்கின்றவர்கள், தங்களுடைய கூலி குறைவாய் இருப்பதால் வேலைசெய்யமாட்டோமென்று கட்டுப்பாடு சமீபத்தில் செய்து

தொண்டார்கள். அதனால் நிலக்கரி விலை அதிகமாயிற்று. பல கைத்தொழிற் சாலைகளில் வேலைகள் நடத்தப்படாமல் தடங்கல்கள் நேரிட்டன; ஜாங்கள் பட்ட கஷ்டங்கள் நாநாவிதமாகப் பெருகின. நம்மூரில் விறகு ஒரு வாரம் கிடைக்கவில்லை என்றால், அதனால் நம்முடைய ஜாங்கள் படும் கஷ்டம் இன்னதென்று விவரிக்க இயலாது. சமைத்தல் எவ்விதம் நடக்கும்? சமைத்தலின்றேல் போஜநம் எது? இக்கொடுமைகளை எல்லாம் கண்ணுற்று இவைகளை நிவர்த்திக்கும் படியாக ஸர் வில்லியம் ராம்ஸே (Sir Williarn Ramsay) என்ற ரஸாயந சாஸ்திரி ஒரு உபாயம் கண்டு பிடித்திருக்கிறார். அதாவது நிலக்கரிச் சுரங்கத்திற்குக் குழாய்களைப் புகட்டியும், மின்சாரத்தால் (Electricity) நிலக்கரிச்சுரங்கத்தை எறித்தும், நிலக்கரி சரியாய் எறியும்படி, வெளியிலுள்ள காற்றை பம்பு (Pump) யந்திரமூலமாய்ப் புகட்டியும், நிலக்கரி ஆவியை (Coal Gas) உண்டுபண்ணலாம் என்பதாம். நிலக்கரி ஆவியால் சுரங்கக்குழாய் முகப்பல், யந்திரங்களைச் சுழலும்படி செய்தல்கூடும். அச்சுழற்சியால்ஏற்படும்சக்தியை (Power) மின்சார உபாயத்தால் (Electric apparatus) நூறுமைல் சுற்றளவுள்ள இடத்திலுள்ள பல யந்திரங்களுக்கு விநியோகிக்கலாம். இந்த உபாயம் சித்திக்குமாகில், இதன் மூலமாய் ஒரு பெருத்த லாபம் உண்டாகிறது. பிரகிருதத்தில் நிலக்கரியை நேரில் உபயோகிப்பதால் அதனால் உண்டாகும் சக்தியில் 100-க்கு 15 தான் தொழிலுக்கு உபயோகமாகிறது. 85 பங்கு வீணாய்ச் சேதமாகிறது. மேற்கண்டபடி, நிலக்கரி ஆவியை (Coal gas) உபயோகிப்பதால் 100-க்கு 30 பாகம் உபயோகமாகவும் 70 பாகம் சேதமாகவும் ஏற்படும். முன்னரைவிட இரட்டிப்புத் தொழில் புரிதல் கூடும்.

---

ஒரு தீரத்தன்மையான பரீக்ஷை:—இட்டாலியா தேசத்திலுள்ள வெஸூவியஸ் என்ற அக்கி மலையின் சிகரத்தின் மேல் இரண்டு தீரர்களான அறிஞர்கள் ஏறி, அதினின்று செங்குத்தாயுள்ள ஓட்டை வழியாய் சுமார் 1000 அடிவரையில் கயிற்றைத் தொங்கவிட்டு இறங்கினார்கள். அதன் உள்ளத்தின் கண்ணுள்ள மர்மத்தை அறிவதற்கு அதன் கண் பல இடங்களைப்பற்றிய, புகைப்படங்கள் எடுத்தார்கள். பலவிதமான கற்களை சேகரித்தார்கள். அதன் கண்ணுள்ள ஆவிகளை பல சோதனை யந்திரங்களால் இன்னதன்மையன என்றும்எவ்வளவு கநமுள்ளனவென்றும் கண்டுபிடித்தார்கள். அதன் ஆழமான விடத்தில் சுமார் 2 மணி 30 நிமிஷகாலம் தங்கி நாநாவிதமான பரீக்ஷைகள் செய்து பின்பு திரும்பிக் கயிறு வழியாகவே ஏறி வெளிவந்தார்கள். மிகவும் களைத்துச்சோர்ந்திருந்தார்கள். பிரபஞ்சத்தின் உண்மைகளை அறிதலுக்கு மேல்நாட்டு அறிஞர்கள் படும் கஷ்டமும் செய்யும் முயற்சியும் மிகவும் வியக்கத்தக்கன.

ஸ்டாம்புமூலம் வரும்படி:—சென்றவருஷத்தில் சென்னைப்பட்டணம் ராஜதானியில் 1கோடியே 27 லக்ஷரூபாய்க்கு மேற்பட்டு, ஸ்டாம்புவிற்பனையால் சர்க்காருக்கு வரும்படி வந்திருக்கிறது. அதற்கு முன்வருஷத்தைவிட 6,15,000ரூ அதிக வரும்படி.

——

வளிவள்ளம் பிரஹ்மக்ஞாந சபைக்கூட்டம்:— சென்றமீ 20 21உகளில் தஞ்சாவூர்ஜில்லா வளிவள்ளத்தில் ஷை ஜில்லாவின் கண்ணுள்ள பிரஹமக்ஞாகக் கிளைச்சபைகளின் பெருங்கூட்டம் கூடிற்று, ஸ்ரீமாந் நீலகண்டசாஸ்திரிகளவர்கள் அக்ராஸநம் வகித்தார். மகா-ா-ா-ஸ்ரீ எனங்குடி இராமச்சந்திரநாயக்கர், டி. எஸ். லக்ஷ்மிநாராயணஐயரவர்கள் முதலியவர்கள் உபந்யாஸஞ்செய்தார்கள். மேற்படி சபையானது வேதகோஷத்துடன் ஆரம்பித்து வேதகோஷத்துடன் முடிந்தது.

——

ஆதியாற்றின் பிரஹ்மக்ஞாந சபைக்கூட்டம்:—சென்றமீ 20, 21 உகளில் பிரஹ்மக்ஞானசபையின அந்தரங்கவகுப்பினரின கூட்டம் கூடியது. சுமார் 150 பேர்களுக்குமேல் பல ஜில்லாக்களிலிருந்து கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். இரண்டு தினங்களிலும் 6 முறை கூடினார்கள். உயர்நலமமைந்த ஞாந விஷயங்கள் பேசப்பட்டன. வந்திருந்தவர்களில் பெரும்பாலர் 21உ ஸாயங்காலம் அவரவர் ஊர் திரும்பினார்கள். மிக உத்ஸாஹத்துடனும், நேர்மையாகவும் எல்லாவிஷயங்களும் நடைபெற்றன. மாதாஸ்ரீ அந்நிபெஸண்டு அம்மையும், ஸ்ரீமாந் லெட்பீடர் என்பாரும் இப்போது மேனாடுகளில் யாத்திரை செய்கின்றார்கள்.

——

ஒரு நல்ல விஷயம்:—மாதாஸ்ரீ அந்நிபெஸண்டு அம்மை, பிரஹ்மக்ஞாந சபையின் தலைவராக இருந்துகொண்டு உலகத்தின் ஞாநமுறையின் அபிவிருத்தியின் பொருட்டுப் பலதடவை உலக யாத்திரைசெய்துகொண்டு வருகிறார்கள். அவர்கள் தம்முடைய தேக சௌக்யத்தைப்பற்றிக் கொஞ்சமும் கவனிக்கிறார்கள் இல்லை. இந்த யாத்திரைச் செலவெல்லாம் தம்முடைய சொந்த உத்தரவாதத்தில் வைத்துக்கொண்டு வருகிறார்கள். அந்த உத்தரவாதத்தை அவர்களே பொறுக்கும்படி விடுதல் நியாயமன்று. வருஷாவருஷம் மாதாஸ்ரீ அம்மையின் ஜநநதிநமான அக்டோபர்மீ 1உயில், அம்மையாரின் இஷ்டப்படி செலவழிக்க, பிரஹ்மக்ஞாந சபையின் அங்கத்தினர் அவரவர் சௌகர்யப்படி நன்கொடை கொடுக்கிறது வழக்கம். அதை அம்மையார் தம்முடைய பிரயோஜநத்திற்கு உபயோகிக்காமல் யாதேனும் ஒரு தர்ம கார்யத்திற்கு உபயோகித்து வருகிறார்கள். அநேக அங்கத்தினர்களின் அபிப்பிராயம், இவ்வருஷத்தில் கொடுக்கும் நன்கொடையை, மாதாஸ்ரீ அம்மை உலக யாத்திரைச்செலவுக்கென்று குறிப்பிட்டுக் கொடுத்தால், நலமாக இருக்குமென்பதாம். நம் தேசத்தில் உள்ளவர்கள் தாம் கொடுக்க உத்தேசிக்கும் பணத்தை Mr. C. S. Best. (Theosophical Society, Adyar, Madras S.) ஸ்ரீமான் பெஸ்ட் என்பாருக்கு அனுப்ப வேண்டும். இவ்வருஷத்தில் தாராளமாய் நம்மவர்கள் நன்கொடை கொடுக்க வேண்டும் என்பது நம்முடைய பிரார்த்தனை.

**ஜப்பான் ராஜ்யத்து சக்ரவர்த்தியின் மரணம்:**—சென்ற ஜூலை மீ 29௳ மாட்சிமை தங்கிய ஜப்பான் தேசத்து சக்ரவர்த்தி (Mikado) அவர்கள் மரணமாயினர். மரணமானகாலத்தில் இவருக்கு வயது 60. உலகத்தில் உயர்நலமமைந்த மஹா உத்தமபுருஷர்களில் இவர் ஒருவராவர். அவர் ராஜ்யத்தின் ஜநங்களுக்கு சக்ரவர்த்தியாக மாத்திரமில்லாமல் அவர்களுடைய யோகக்ஷேமங்களைக் கண்ணும் கருத்துமாய்ப் பாதுகார்த்து வந்த பிதாவைப்போலும் மதிக்கப்பட்டுவந்தார். அவர் ஒரு மஹாத்மாவென்றே பிரஹமக்ஞாந சபையார் எல்லோரும் எண்ணிவந்தார்கள். நம்தேசத்தில் ஞாந ஜநகர் போலவும், யூதர்களின் இராஜாவான ஸோலமான் என்பாரைப் போலவும் ஞாநியாக விளங்கிவந்தார். அவர் சில நாளாய்த் தேக அஸௌக்கியமாக விருந்தார். அக்காலத்தில், உல்லாசமாய்க் காலங்கழிக்கும் தன்மையான ஜப்பானியர்கள் வேடிக்கைகளை முற்றும் தவிர்த்து, அரண்மனையைச் சுற்றி சக்ரவர்த்தியின் வியாதி நீங்க வேண்டுமென மநம் உருகி ஸ்தோத்திரங்கள் செய்துவந்தனர். ஜப்பானியரின் இத்தன்மையான நடத்தை அவர்களுக்குச் சக்ரவர்த்தியின் மீதிருந்த பிரேமையைக் காட்டுகிறது. இவரது இயற்கையான பெயர் முட்ஸூ ஹைடோ (Mutsoo Hito) என்பதாம். இவர் 1852-ம் வருஷம் ஜநநமானார். இவர் பிதாவின் பெயர் ஓரா ஹைடோ (Ora Hito). 1867 வருஷம் பட்டத்துக்கு வந்தார். பட்டத்துக்கு வந்த காலத்தில் ஜப்பான்தேசம் சீர் குலைந்து கீழ்க்கடையான நிலைமையிலிருந்தது. இவர்காலத்தில்தான் ஜப்பான் தேசத்தில் கல்வி விஸ்தாரமாக அபிவிருத்தியடைந்தது. ஜநங்கள் ஸ்வாதந்தர்யம் பெற்றார்கள். இராஜாங்கஸம்பந்தமான ஒவ்வொரு துறையிலும் தற்கால நாகரிகத்தை யநுஸரித்த உயர்நலமமைந்த சீர்திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஜநங்களின் பிரதி நிதி சபையொன்றும் ஏற்படுத்தப்பெற்றது. ஜலஸைந்யமும் நிலஸைந்யமும் அந்யதேசத்தவர் பிரமிக்கும்படி நிருவப்பெற்றன. சீன தேசத்துடன் போர்புரிந்து அது தாழ்த்தப்பட்டது. ஐரோப்பாக்கண்டத்தில் உந்நத பதவிபெற்றிருக்கிற ருஷியாதேசத்துடன் ஸமீபகாலத்தில் இவருடைய ஆளுகையிற்றான் மிகவும் பலமான கடல் சண்டையும் நிலச்சண்டையும் நேர்ந்தன. அந்த இரண்டு சண்டைகளிலும் ஜப்பான் வெற்றிபெற்று, அதனால் ஜப்பானின் கீர்த்தியானது உதய சூரியன்போல் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. ஜப்பானியர் மஞ்சள் நிறத்தினர். இந்தியாதேசத்தினின்று வெளிக்கிளம்பிப் போன பௌத்த மதம் அத்தேசத்தில் பரவியிருக்கின்றது. ஷின்டோமதமும் கன்பூஷியஸ் (Confusius) சம்பிரதாயமும் ஊடே ஊடே உலாவிக்கொண்டிருக்கின்றன. ருஷியர்களுடன்சண்டைக்கு முந்தி ஜப்பானியரை மேல்நாட்டார் மஞ்சட் குரங்கென்று ஏளநம் பண்ணுவார்கள். சண்டையில் வெற்றிபெற்ற மேல் மேனாட்டு தேசத்தார்கள் ஒவ்வொருவரும் ஜப்பானியர் ஸ்நேஹத்தை நனி விரும்பினவராய் ஸ்நேஹ உடன்படிக்கைகள் செய்து கொண்டு வருகிறார்கள். இத்தன்மையான மஹிமையை ஜப்பானியர் பெறுதலுக்குக் காரணம், இப்போது காலஞ்சென்ற மஹா புருஷனான முட்ஸூ ஹைடோ என்பவரேயாவர். ஜப்பானியர் சாந்த ஸமுத்திரத்தில் (Pacific Ocean) விஸ்தாரமான தீவை வஹித்துக்கொண்டிருக்கிறார்கள். பநாமா வாய்க்கால் திறந்தமேல் அவர் செல்வமும் செல்வாக்கும் இன்னும்மேலாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கக் கூடியது. அவர்களின் உலகசம்பத்தும் இன்னும் அதிகமாகப் பிரகாசிக்கும் போல் தோன்றுகிறது. எல்லாம் ஈசன் செயல், உலகநாடகத்தை அவரே நடிப்பித்து வைக்கின்றார்.

பத்திராதிபர்.

இவர்கள் அணிமாதி ஐசுவர்யமுள்ளவர்கள். ஒரு மந்வந்தரம் வரை ஆயுள் உள்ளவர்கள், காமருகர்ச்சி யுள்ளவர்கள், ஸங்கல்பத்தினால் மாதாபிதாக்களின் ஸம்பந்தமின்றி சரீரங்களை உண்டுபண்ணிக்கொள்ளுகிறவர்கள். அப்ஸரஸ்த்ரீகளால் சூழப்பட்டிருக்கிறார்கள்.

மஹர்லோகத்தில் (பிரஜாபதியின் லோகத்தில்) 5 வகை தேவர்கள் இருக்கிறார்கள்; (1) குமுதர்கள் (2) ரிபுக்கள் (3) பிரதர்தநர்கள் (4) அஞ்சநாபர்கள் (5) பிரசிதாபர்கள். இவர்கள் பஞ்ச மஹா பூதங்களை வசத்திலுடையவர்கள். தியாநத்தை ஆகாரமாகவுடையவர்கள். 1000 கல்பம் வரை ஆயுஸ் உள்ளவர்கள்.

பிரஹ்மாவை அதிபதியாகவுடைய ஜநோலோகத்தில் வஸிக்கிற தேவர்கள் 4 விதம்:— (1) பிரஹ்மபுரோகிதர்களுக்கு 1000 கல்பம் ஆயுஸ், (2) பிரஹ்மகாயிகர்களுக்கு 2000 கல்பம் ஆயுஸ், (3) பிரஹ்ம மஹாகாயிகர்களுக்கு 4000 கல்பம் ஆயுஸ், (4) அமரர்களுக்கு 8000 கல்பம் ஆயுஸ். இவர்கள் பஞ்சமஹாபூதங்களையும் இந்த்ரியங்களையும் வசப்படுத்தினவர்கள். முன்னவரைவிடப் பின்னவர் 2 மடங்கு ஆயுளை அதிகமாக உடையவர்கள்.

தபோலோகத்தில் உள்ளவர்கள் 3 வகை:—(1) அபாஸ்வரர்கள் (2) மஹாபாஸ்வரர்கள் (3) ஸத்தியமஹாபாஸ்வரர்கள். இவர்கள் பூதங்கள், இந்திரியங்கள், பஞ்சதந்மாத்திரைகளை வசப்படுத்தினவர்கள். ஜநோலோகத்தில் வஸிக்கின்ற அமரர்களைவிட, தபோலோகத்திலுள்ள மேஷமூன்று வகுப்பினரும், முறையே முன்னவரைக் காட்டிலும் பின்னவர் 2 மடங்கு ஆயுளை உடையவர்கள். முன்போல விவரித்துக்கொள்ளுக. இவர்கள் ஊர்த்வரேதஸ்ஸை உடையவர்கள். மேல் லோகங்களிலும் கீழ்லோகங்களிலும் ஆவரணமில்லாதவர்கள். எல்லாவற்றையும் அறியக்கூடியவர்கள்.

ஸத்யலோகத்திலுள்ளவர்கள் 4வகையினர். 'தமக்கு' என்றுதேசம், வாஸஸ்தாநம் இல்லாதவர்கள். யாதொரு ஆகாரமுமில்லாதவர்களாய் தம் ஸ்வரூபத்திலுள்ளவர்கள்:—(1) அச்யுதர்கள். (2) சுத்தநிவாஸர்கள். (3) ஸத்யாபாக்கள். (4) ஸம்ஜ்ஞாஸம்ஜ்ஞிர்கள். இவர்கள் முறையே ஸவிதர்க்கம், ஸவிசாரம், ஆநந்தம், அஸ்மிதை

இந்நான்கு முறையாக தியாநத்தைச் செய்கின்றவர்கள். இவர்கள் மூலப்பிரகிருதியைத்தம்வசத்தில் வைத்துக்கொண்டிருக்கிறவர்கள்.

மேற்கண்ட லோகங்களெல்லாம், ஒரு பிரஹ்மாண்டத்திற்குட் பட்டவைகள். அவைகளிலுள்ளவர்கள் அதைக் கடந்துபோக இயலாதவர்கள். விதேஹர்கள், பிரகிருதிலயர்கள் இவ்விருவரும் பிரஹ்மாண்டத்தைக் கடந்தவர்களாகையால், மேற்கண்டவர்களில் சேரவில்லை. மேற்கண்ட விஷயங்கள் ஸூர்யனிடத்தில் ஸம்யமம் செய்வதினால் யோகிக்குத் தெரியவரும்.

27. சந்த்ரே தாராவ்யூஹஜ்ஞாநம் ॥

சந்திரனிடத்தில் ஸம்யமம் செய்வதினால் நக்ஷத்ரங்களின் அமைப்பை யறியலாம்.

குறிப்பு:—ஸூர்யனின் காந்தி நக்ஷத்ரங்களின் காந்தியைக் கீழ்ப்படுத்தலினால், ஸூர்யனின்மேல் ஸம்யமம் செய்தால், நக்ஷத்ரங்களைப்பற்றிய ஞாநம் உண்டாகாது.

28. த்ருவே தத்கதிஜ்ஞாநம் ॥

துருவநக்ஷத்ரத்திலிடத்தில் ஸம்யமம் செய்வதினால் நக்ஷத்ரங்களின் கதிகளை (சலநங்களை) அறியலாம்.

குறிப்பு:--முந்திய சூத்திரத்தில் நக்ஷத்திரங்களின் அமைப்பும், இதில் அவைகளின் கதியும் சொல்லப்பட்டிருக்கின்றன.

29. நாபிசக்ரே காயவ்யூஹஜ்ஞாநம் ॥

(நம் சரீரத்திலுள்ள) நாபிசக்ரத்தில் ஸம்யமம் செய் வதினால் சரீரத்தின் அமைப்பை அறியலாம்.

குறிப்பு:—இதுவரை வெளியிலுள்ள விஷயங்களுடைய வித்தியைச் சொன்னார். இனி சரீரத்திற்குள்ளே உள்ள விஷயங்களின் வித்தியைச் சொல்லுகிறார். நாபியானது சரீரத்தின் மத்தியிலிருக்கிறது. அது வேர்க்கிழங்கு போலிருக்கின்றமையால் நாபிகந்தம் என்று பெயர். சரீரத்தின் அமைப்பு:—தோல், ரத்தம், மாம்ஸம், நரம்புகள் (ஸ்நாயு), அஸ்தி, மஜ்ஜை, வாதம், பித்தம், ஸ்லேஷ்மம்,

சுக்லம் ஆகிய இப்பத்தும் சரீரத்திலுள்ளன. இவைகளில் மூன்றுள்ளது பிந்தியதற்குப் புறம்பேயுள்ளது.

30. 𑌕𑌣𑍍𑌠𑌕𑍂𑌪𑍇 𑌕𑍍𑌷𑍁𑌤𑍍𑌪𑌿𑌪𑌾𑌸𑌾𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 ॥

(கண்டகூபத்தில்) கழுத்திலுள்ள கண்டநாளத்தில் ஸம்யமம் செய்வதினால் பசி தாகங்களின் நிவிர்த்தி உண்டாகும்.

31. 𑌕𑍂𑌰𑍍𑌮𑌨𑌾𑌡𑍍𑌯𑌾𑌂 𑌸𑍍𑌥𑍈𑌰𑍍𑌯𑌮𑍍 ॥

கூர்ம (ஆமை போன்ற) நாடியில் ஸம்யமம் செய்வதினால் (மநம்) ஸ்திரமான இருப்பைப் பெறலாம்.

குறிப்பு:—இந்நாடி கழுத்துக்குக் கீழ் மார்பில் உள்ளது. இது ஸர்ப்பத்தையும் உடும்பையும் போலுள்ளது. விக்ஞாந பிக்ஷு என்பார் அபிப்பிராயப்படி மண்டலாகாரமாக இருக்கின்ற ஹிருதயமே கூர்மாகாரமாக இருக்கின்றது. அதுவே இங்கு சொல்லப்படுகிறது. மற்றவர்கள் அபிப்பிராயத்தில் அது வேறுநாடி, ஹிருதயமன்று.

32. 𑌮𑍂𑌰𑍍𑌧𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑌿 𑌸𑌿𑌦𑍍𑌧𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 ॥

சிரஸில் உள்ள ஜ்யோதிஸில் ஸம்யமம் செய்வதினால், ஸித்தர்களை நேரில் பார்க்கலாம்.

குறிப்பு:—ஸித்தர்கள் பூமிக்கும் அந்தரிக்ஷத்திற்கும் மத்தியிலிருக்கிறார்கள்.

33. 𑌪𑍍𑌰𑌾𑌤𑌿𑌭𑌾𑌦𑍍𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌮𑍍 ॥

பிரகிருதி புருஷ விவேகம் உதயமாவதற்குமுன், முன் சொன்ன ஸம்யமம் இன்றியே எல்லாவற்றையும் அறியக்கூடியது.

குறிப்பு:—முன் என்றால், பிரகிருதி புருஷவிவேகம் உதயமாகும் சமயத்தில் எனப் பொருள்படுகிறது. பிராதிபம் என்று மூலத்தில் உள்ளது. அந்நிலையை அடைந்தவன் ஸம்யமம் செய்யாமலே எல்லாவற்றையும் அறிவான்.

(2) இந்த பிராதிபம் என்பது தாரகஞானம் என்று சொல்லப் பெறும் இது மோக்ஷத்திற்குக் கொண்டுவிடும். இதற்கு அடுத்த படியைப்பற்றி 54-ம் சூத்திரத்தைப் பார்க்க.

(3) முன் சொன்ன ஸம்யமம் எல்லாம், அப்பியாஸி தன் அநுஷ்டாநம் ஸரியா அல்லது பிழையா என்று தீர்மானித்துக்கொள்ளப் பரீக்ஷை போன்றவையாம். மேற்படியில் இருக்கின்ற யோகியானவன் புருஷ விவேகம் பெறுமுன், சூரியன் உதயமாகுமுன், உடைத்தாயிருக்கின்ற ஞானத்திற்கு, அருணோதயம் போன்றதான ஞானம் பிராதிபம் என்று பெயர். பின்பு அடுத்த சூத்திரத்தில் புருஷ ஞானம், பூர்ணம் எவ்வித உபாயத்தால் ஏற்படும் என்பதை விவரிக்கின்றார்.

34. ஹ்ருதயெ சித்தஸம்வித் ॥

ஹிருதயத்தில் ஸம்யமம் செய்தலினால் மநத்தின் ஸ்வரூபஞாநம் உண்டாகிறது.

குறிப்பு:—சரீரத்திற்குப் பிரஹ்மபுர மென்று பெயர். அதின் ஹிருதய ஆகாசத்தில் அந்தக்கரணம் இருக்கிறது. அது ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் இருப்பிடம். அந்த இடத்தில் ஸம்யமம் செய்தலினால் வாஸனையுடன் கூடிய மநத்தின் உண்மையான ஸ்வரூபம் தெரியவரும்.

35. ஸத்த்வபுருஷயொரத்யந்தாஸங்கீர்ணயொ:
ப்ரத்யயாவிஶெஷொ போக: பரார்த்தாத்ஸ்வார்த்த
ஸம்யமாத்புருஷஜ்ஞாநம் ॥

உண்மையில் வேறு வேறான ஸத்வம் (புத்தி) என்ன, புருஷன் என்ன இவை இரண்டையும் ஒன்றேடொன்று சேர்த்து அறிவதானது போக(த்திற்குக் காரண)மாம். (இந்த போகமானது) ஸத்வத்திற்கு ஸாதகமன்று. மற்றதற்கு (புருஷனுக்கு) ஸாதகமாம். புருஷஸ்வரூபத்தில் தனித்து ஸம்யமம் செய்வதால் புருஷ ஞாநம் உண்டாகும்.

குறிப்பு:—ஸத்துவம் ஸமஷ்டியில் பிரகிருதி யென்றும், வியஷ்டியில் புத்தி யென்றும் பொருள்படும். ஸ்வார்த்தம், அதாவது ஸ்வா + அர்த்தம். ஸ்வா=புருஷனின், அர்த்தம்=பொருள்.* புத்தி (பிரக்ஞை) புருஷனை அறிகிறதில்லை. ஆனால் புருஷன் பிரக்ஞை

* புருஷன் குணத்ரயத்திற் குட்படாத சின்மயமான விர்த்தி ஸந்தானம் (பிரவாஹம்).

யை அறிகிறான். புருஷன் ஜடமான புத்திக்கு சைதந்யத்தைக் கொடுத்து, அதன் மூலம் அறிகிறான். ஆனால் புத்தி புருஷனுக்கு அடுத்திருக்கின்றமையால் புத்தி அறிகின்றதென நினைக்கிறோம். புருஷனைப் புருஷன்தான் அறியலாமே ஒழிய, புத்தியானது ஜடமாகையால் அறிய முடியாது.

அடியிற்கண்ட ப்ருஹதாரண்யக உபநிஷத் வாக்கியம் இங்கு கவனிக்க தக்கது:—

"விஜ்ஞாதாரமரே கேநவிஜாநீயாத்॥"

புருஷனை வேறு கருவியால் அறிதல் முடியாது. அதாவது புருஷன் தான் புருஷனை அறிதல் கூடும் என்றபடி. புருஷன் ஸ்வப்ரகாசன் என்பதாம்.

36. ததः ப்ராதிபஶ்ராவணவேதநாதர்சாஸ்வாதவார்தா ஜாயந்தே॥

(மேற்கண்ட முறைப்படி அடைந்த புருஷ ஸாக்ஷாத்காரத்தினின்று)ப் பிறகு (ஸ்ப்யமம் இல்லாமலே) புத்திக்கு ஸூக்ஷ்மமான விஷயங்கள், மறைவான விஷயங்கள், தூரத்திலுள்ள விஷயங்கள், சென்றவைகள் வரப்போகிறவைகள் இவைகளை அறியும் தெளிவும், பஞ்சேந்திரியங்களுக்கு கேட்டல், ஸ்பரிசித்தல், பார்த்தல், நுகர்தல், முதலிய திவ்ய சக்திகளின் விகாஸமும் உண்டாகின்றன.

குறிப்பு:—மேற்கண்ட அப்பால முறையின் பயனாக இந்திரியங்களின் திவ்யசக்தியும், புத்திக்கு திவ்விய சக்தியும் யோகிக்கு உண்டாகும். எப்போதும் எல்லாம் அவருக்குத் தெரியவரும். உள்ளே நோக்குகின்றமையால் முக்கண் திறக்கும். நினைப்பில்லாமலே ஸகல விஷயங்களும் அவருக்குப் புலப்படும்.

37. தே ஸமாதாவுபஸர்கா வ்யுத்தாநே ஸித்தய:॥

அவைகள் முன் (சொல்லியவை) ஸமாதிக்கு (அந்தர்முகப்பட்டு புருஷஸாக்ஷாத்காரம் பெறுதலில்) தடைகளாகும். பஹிர்முகமாகச் சொல்லுமிடத்து (உலகவியாபார தசையில்) அவைகள் ஸித்திகளாகும்.

குறிப்பு:—ஸமாதி என்பது இங்கு அஸம்ப்ரக்ஞாத ஸமாதி என்று அறியத்தக்கது. இந்நிலையில் உள்ளவனுக்கு பிராதிபாதி

ஸித்திகள் இடையூறுகளாகும். கைவல்யத்தை நோக்குகிறவன் எந்த ஸித்திகளையும் விரும்பான். எவ்வளவு உயர்வுள்ள ஸித்திகளை யடைந்தாலும் இவன் கிருதகிருத்யனாகமாட்டான். அதாவது செய்யவேண்டிய கார்யத்தைச் செய்தவனாகமாட்டான். அவன் செய்ய வேண்டியது வெகு கார்யங்களுள்ளன. இதுவே கீதையில் அடியில் வருமாறு:—

"𑌏𑌤𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌨𑍍 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 ।
𑌕𑍃𑌤𑌕𑍃𑌤𑍍𑌯𑌶𑍍𑌚 𑌭𑌾𑌰𑌤 ॥"

இதன்பொருள்: ஒருவன் இதனை அறிந்து, அறிவுள்ளவனாகவும், செய்யவேண்டியனதைச் செய்தவனாகவும் ஆவன்.—கீதை., 15-ம் அத், 20-ம் சு.

இதுவரை ஞானரூபமான விபூதிகளை (சித்திகளை) விவரித்தார். இனி அடுத்த சூத்திரம் முதற்கொண்டு கிரியாரூபமான ஸித்திகளை விவரிக்கிறார்.

38. 𑌬𑌨𑍍𑌧𑌕𑌾𑌰𑌣𑌶𑍈𑌥𑌿𑌲𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌚𑌾𑌰𑌸𑌂𑌵𑍇𑌦𑌨𑌾𑌚𑍍𑌚
𑌚𑌿𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌪𑌰𑌶𑌰𑍀𑌰𑌾𑌵𑍇𑌶𑌃 ॥

பந்தத்திற்குக் காரணமானதை (புண்ணிய பாபகர்மத்தை ஸமாதியினால்) நழுவும்படி செய்தலினாலும், மநஸ் சஞ்சலிக்கும் (நாடிகளின்) மார்க்கத்தை அறிவதினாலும் மநத்திற்குப் பாகாயப் பிரவேசம் செய்யும் தகைமை உண்டாகிறது.

குறிப்பு:—யோகியானவன் தன் மநம் எந்தக் கர்மத்தின் காரணமாகத் தன்னுடைய சரீரத்தில் கட்டுப்பட்டிருக்கிறது என்பதை அறிந்தும், யோகாப்யாஸத்தினால் கர்மபந்தங்களினின்று தன்னை விடுவித்துக் கொள்ளக்கூடுமாகையால் மநஸ், இந்திரியங்களை அந்தக் கட்டினின்று நழுவும்படி செய்தும், எந்த நாடிகளில் மநஸ், இந்த்ரியங்கள் நடைபெறுகின்றன என்பதை அறிந்து, பின்னர் எவ்வழியால், எந்நாடிவழியாகத் தன்னுடைய சரீரத்தை விட்டு வெளியேறலாமென்று அறிந்தும், வேறு சரீரத்தில் எந்நாடி வழியாக நுழையலாமென்று உணர்ந்தும், தன் சரீரத்தில் திரும்பவும் எவ்விதம் நுழையலாமென்று தெரிந்தும், பரகாயப்பிரவேசம் செய்யலாம். மநஸ் வெளியேறும்போது மற்ற இந்த்ரியங்களும், ராணித்தேனீ

டானது வெளியேறுங்காலத்தில் மற்றையத் தேனீக்களும் வெளிக் கிளம்புமாறுபோல மற்ற இந்த்ரியங்களும் வெளிக்கிளம்பும். (பிரச்ந உபநிஷத், 2-வது பிரச்நத்தைப் பார்க்க.)

39. உதானஜயாஜ்ஜலபங்ககண்டகாதிஷ்வஸங்க உத்க்ராந்திஶ்ச ॥

உதானவாயுவை ஜயித்தலினுல், ஜலம், சேர்,முள் முதலியவைகளில் சம்பந்திக்காமல் சலித்தலும், (வேண்டுங்காலத்தில்) சரீரத்தைவிட்டே வெளியேறுதலும் செய்து கொள்ளலாம்.

குறிப்பு:—இந்த்ரியங்களின் பிரவிர்த்தி இருவிதம். பார்வை முதலிய வெளிநோக்கிய பிரவிர்த்தி. ஜீவிப்பதற்காக எல்லா இந்த்ரியங்களின் உள்நோக்கிய (ஆந்தர) பிரவிர்த்தி மற்றது. இந்த உள் நோக்கிய பிரவிர்த்தியின் கார்யங்கள் பஞ்ச பிராணன்கள். அவை யாவன:—(1) பிராணன் உச்வாஸ நிச்வாஸரூபமாக நாஸிகை முதல் ஹிருதயம் வரை சஞ்சரிக்கும். (2) ஸமானன் ஆகாரங்களை ஸமப்படுத்துகிறது, ஹிருதயம் முதல் நாபிவரை ஸஞ்சரிக்கிறது. (3) அபானன் நாபி ஸ்தானத்தினின்று பாதம் வரை வியாபித்துக் கொண்டிருக்கிறது. இது மலமூத்ராதிகளை வெளியேற்றும். (4) உதானன்: நாஸி நுனியினின்று சிரஸ்வரை வியாபித்திருக்கிறது. சரீரத்தைவிட்டு மரணம், இந்த்ரியங்கள் முதலியன வெளியேறுவதற்குக் காரணம் இது. (5) வியானன் சரீரம் முழுமையும் வியாபித்திருக்கிறது. இந்த ஐந்து வாயுக்களில் பிராணன் பிரதானமானது, முக்கியப் பிராணன் எனப் பெயர்பெறும். பிராணுதிகளுக்குள் ஏற்பட்ட சண்டையைப்பற்றி பிரச்நம், சாந்தோக்கியம், ப்ருஹதாரண்யக உபநிஷத்துக்களைப் பார்க்க. உதானனின் மேல் ஸம்யமம் செய்து அதை ஜயிப்பதனுல் ஜலம், சேர், முள் முதலியவைகளில் படாமல் நடக்கலாம். ஸுஷும்நா நாடியின் மூலமாய் ஜீவன் சரீரத்தை விட்டு அர்ச்சிராதி மார்க்கமாய்ச் செல்லலாம்.

40. ஸமானஜயாஜ்ஜ்வலனம் ॥

ஸமானவாயுவை ஜயித்தலினுல், சரீரத்திற்கு ஜ்வலிக்கும் தன்மை உண்டாகிறது.

குறிப்பு:—ஸமானவாயுவை ஜயித்த யோகியானவன் உயிருடன் இருக்குங் காலத்தில் தேஜஸ்வியாக இருப்பான். மரணம் வேண்

டுங்காலத்தில் தன்னிடமிருந்து அக்நி ஜ்வாலையை உண்டு பண்ணிக் கொண்டு தன் சரீரத்தை தஹநஞ் செய்துகொள்ளலாம். சரப்ங்கர் இராமாயணத்தில் ஸ்ரீராமனை தர்சநம் செய்த பின்பு தன்னிடமிருந்து ஒரு தேஜஸ்ஸை உண்டுபண்ணித் தன்னுடைய சரீரத்தை தஹநஞ்செய்துவிட்டு திவ்ய சரீரத்துடன் பிரஹ்மலோகத்திற்கு ஏகினார். இதை ஆரண்ய காண்டத்திற் கண்டு கொள்ளுக. பதிவ்ரதா ஸ்த்ரீயானவள் புருஷன் இறந்த மேல் எப்படித்தன்னுடைய தேஜஸ்ஸால் தன் சரீரத்தை தஹநம் பண்ணிக்கொள்ளுவாளோ, அவ்விதமே யோகிகள் தாங்கள் உலகத்திற்கு வந்த கார்யம் ஆகிவிட்டது என்று அப்படிச் செய்துகொள்ளுகிறது உண்டு.

41. 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌾𑌕𑌾𑌶𑌯𑍋𑌃 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌸𑌂𑌯𑌮𑌾𑌦𑍍𑌦𑌿𑌵𑍍𑌯𑌂
𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌮𑍍 ॥

சுரோத்ரேந்த்ரியத்திற்கும், ஆகாசத்திற்கும் உள்ள ஸம்பந்தத்தை ஸம்யமம் செய்தலினால், யோகியின் சுரோத்ரேந்த்ரியமானது நுண்ணிய சப்தங்களைக் கேட்கும் தகைமையைப் பெறுகிறது.

குறிப்பு:—கேட்கும் தன்மை பூர்த்தியடைகிறது. ஆகாசம் ஆவரணமின்றி எங்கும் வியாபகமாக இருத்தலினால் இந்த ஸம்யமத்தினால் ஸித்திபெற்றயோகி நினைத்தமாத்ரத்தில் எந்த சப்தத்தையும் கேட்கக் கூடியவனாவன். இவ்விதமே ஒவ்வொரு இந்த்ரியத்திற்கும் அததன் அதிஷ்டாந பூதங்களுக்கும் உள்ள சம்பந்தத்தில் ஸம்யமஞ் செய்தலினால், அந்த இந்த்ரியத்தின் பூர்ணசக்தி உண்டாகிறது.

| இந்த்ரியம் | | | அதிஷ்டாநபூதம். |
|---|---|---|---|
| த்வக் | ... | ... | வாயு. |
| கண் | ... | ... | தேஜஸ். |
| நாக்கு | ... | ... | ஜலம். |
| நாஸி | ... | .... | ப்ருதிவீ. |

ஸ்ரீராமஜயம்.

## ஸ்ரீமத்வால்மீகிராமாயணம்.

### தமிழ்வசனம்.

திருச்சினுப்பள்ளி. எஸ். பி. ஜி. காலேஜ் லெக்சரர்,

ஸி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார் பி. ஏ.

அவர்களால் ஸுலபமான நடையில் மூலத்திற்கு ஸரியாய் மொழி பெயர்க்கப்பட்டது.

நேர்த்தியான கடிதத்தில் தெளிவான எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. ஏழு காண்டங்களும் ஸுமார் 3500 பக்கங்களில் 16 பாகங்களாக வெளியிடப்பட்டு, 4 வால்யூம்களாய், உயர்ந்த கலிக்கோ கில்ட் பைண்ட் செய்யப்பட்டுத் தயாராயிருக்கின்றன.

ஸெட்டின் விலை ரூ. 23—0—0. (தபால் சார்ஜ் வேறு)

### இங்கிலீஷ் வசனம்.

3 பாகங்கள் வெளியாயிருக்கின்றன. பாக்கி 13 பாகங்கள் இரண்டு மாஸத்திற்கு ஒருதரம் வெளிவரும்.

ஒவ்வொரு பாகத்தின் விலை ரூ. 1—8—0. (தபால் சார்ஜ் வேறு.)

### ஸாவித்ரீசரித்ரம்.

பதிவ்ரதாமஹாத்ம்யம்)

ஸ்ரீமன் மஹாபாரதத்திலிருந்து, மொழிபெயர்க்கப்பட்டது. விலைஅணு 4.

நெ. 27 செட்டைமால் தெரு, திருச்சினுப்பள்ளி. } G ஸ்ரீநிவாஸராகவையங்கார்.

---

## பெண்கல்வி.

சித்திர சகிதமான ஒரு மாதாந்த சஞ்சிகை.

இப்பத்திரிகை ஸ்திரீகளின் நிலைமையை உயர்த்துவதற்காகவே தோன்றிய ஒன்றாகும். இதில் ஸ்திரீகள், தாய், மனைவி, சகோதரி, புத்திரி முதலிய பல நிலைகளில் செய்யவேண்டிய கடமைகளும் குடும்ப நிர்வாக சாஸ்திரம் வைத்தியவிஷயம், சுகாதாரவிஷயம் இவைகளைப்பற்றிய விஷயங்களும், ஒழுக்கம், குணம், கல்வி முதலிய வற்றில் சிறந்தியடைந்துள்ள தற்கால முற்கால மாதர்களின் சரித்திரங்களும் இனிய தமிழில் வெளியிடப்படும்.

இதற்குவிஷயங்கள் எழுதுபவர் முக்கியமாய் ஸ்திரீகளே யாவர்.

☞ இப்பத்திரிகை ஒவ்வொரு குடும்ப ஸ்திரீயும், வாத்திச்சிமார்களாகப் பயிற்சிபெறும் ஒவ்வொரு ஸ்திரீயும் படிக்கவேண்டியது அவசியம்.

வருஷசந்தா ரூ 2—8—0 தனிப்பிரதி 0-4-0 மாதிரிப்பிரதி வேண்டுவோர் ஒரு அணு லேபில் அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

சகோதரி ரேவு. தாயாரம்மா,

பத்திராதிபர், பெண்கல்வி, சென்னை.

பல கண்காக்ஷிகளில்
மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

# பி. சுப்பருய், ஆயுர்வேத

## ஔஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேச பெருமாள்கோவில் சன்னிதி, தஞ்சாவூர்.

தயவு செய்து

இதை தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

## பி. சுப்பருயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

4. **லக்ஷ்மீகர கஸ்தூரி மாத்திரைகள்:**—தாம்பூலம் தரிப்பவர்கள் கையிருப்பில் எப்பொழுதும் வைத்துக்கொள்ளவேண்டிய விலையுயர்ந்த வஸ்து. தந்தநோய், வாய் நாற்றம், அஜீரணம், பித்தவாய்வு இதுகளை நீக்கும் தாம்பூலத்துடனாவது தனியாகவாவது சாப்பிட்ட பின் 2 மாத்திரை உபயோகித்தால் எப்பேர்க்கொத்த கனத்த சாப்பாட்டையும் உடனே ஜீரணம் செய்வதுடன், வாயில் அநேகமணிநேரம் சுகந்த வாசனையிருக்கும். பிரதிதினம் காலையில் இரண்டுமாத்திரைகள் சாப்பிட்டால் நீடித்த அக்நியாந்தம் மலச்சிக்கல், அஜீரணத்தால் உண்டாகும் வயற்றிழிவு, வயிற்று நோய், நெஞ்செரிச்சல் முதலிய பற்பல வியாதிகள் தீரும். பிரசவகாலத்தில் தாம்பூலத்துடன் உபயோகித்து வர்தால் ஜன்னி கிட்டநாடாது. ஜன்னியில் கொடுக்க ஜன்னி தீரும். இதில் லாகிரி முதலான யாதொரு அபாயகரமான வஸ்து சேரவில்லை. காஷ்மீர்தேசத்திலிருந்து நேராகவரவழைத்த கஸ்தூரி தங்கரேக் பச்சைக்கற்பூரம் முதலிய அநேக விலை பெற்ற மருந்து சாமான்களும், வாசனை திரவியங்களும் சேர்த்துச் செய்யப்பட்டிருக்கிறது. தாம்பூலத்துடன் உபயோகித்தால் பச்சைக் கற்பூரம் முதலிய வாசனை வஸ்துகள் உபயோகிக்கவேண்டியது அனுவசியம். அரை குழந்தைகள் முதல் வயது சென்றவர்களுக்கு சளி, இரும்மல், காசம், காலரு, பிளேக், சுரம் முதலானவைகளுக்கு வயதுக்கும் தேகத்துக்கும் தக்கபடி 1 முதல் 4 மாத்திரைகள் வரையில் வெற்றிலைச் சாற்றில் கொடுக்க சுகமாகும். சீசா 1-க்கு விலை அணா 4. இந்தியாவில் 1 முதல் 12 சீசாக்கள் வரையில் அனுப்ப பாக்கிங்கு தபால் சார்சு அணா 5-ம் சிலோனுக்கு அணா 7-ம் பிரத்தியேகம்.

5. **சர்வநோய் சம்ஹாரன்:**—இத்தைலம் கொஞ்சம் தேய்த்தால் கை, கால், கணுக்களின் பிடிப்பு, வீக்கம், முடக்கம், மார்புநோய், தலைநோய் கழுத்துநோய், பக்கசூலை, இடுப்புநோய், குதகவலி, பார்சுவாயு, மேகவாயு முதலான இன்னும் தேகத்தில் உண்டாகும் எல்லா நோய்களையும் சீக்கிரத்தில் குணப்படுத்தும். சீசா 1 க்கு விலை ரூ 1. வி. பி. செலவு 1 முதல் 3 சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

---

என்னுடைய அவுஷத சாலையின் ஹெட் ஆபீசை பரங்கிபேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய் விட்டபடியால், இனி எல்லா ஆர்டர்களும் இப்பக்கத்தின் தலையில் அச்சிட்டிருக்கும் எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக்கோருகிறேன். பரங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.